# பண்டைத்தமிழர் சிந்தனை மரபு



சமரபாகு சீனா உதயகுமார்

# பண்டைத்தமிழர் சிந்தனை மரபு

**அமரர் தங்கம்மா முத்துகிருஷ்ணன் ஞாபகார்த்த வெளியீடு**

சமரபாகு சீனா உதயகுமார்

பண்டைத்தமிழர்
சிந்தனை மரபு

நூலாசிரியர் : சமரபாகு சீனா உதயகுமார்
முதல் பதிப்பு : 16.05.2017
பதிப்புரிமை : ஆசிரியருக்கு
வெளியீடு : அமரர் தங்கம்மா முத்துகிருஷ்ணன் ஞாபகார்த்தமாக
பக்கங்கள் : xviii + 68
ISBN No : 978 - 955 - 43151 - 4 - 3
அட்டைப்பட வடிவமைப்பு: S.மிருத்திகா
அச்சுப்பதிப்பு : சிறீலக்ஷ்மி பிறிண்டேர்ஸ், பலாலிறோட், ஊரெழு

## அமரர் தங்கம்மா முத்துக்கிருஷ்ணன் அவர்களின் வாழ்வியல் வரலாற்றுச் சுவடுகள்

எங்கள் உணர்வோடும், உயிரோடும் இரண்டறக் கலந்து எல்லாமாக விளங்கிய எமது குடும்பத் தலைவியாகத் திகழ்ந்த திருமதி.தங்கம்மா முத்துக்கிருஷ்ணன் அவர்கள் இயற்கையுடன் இரண்டறக் கலந்து இறையடி சேர்ந்து விட்டார்! என்பது கனவு போல் உள்ளது.

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்றும்
பெருமையுடைத்து இவ்வுலகு"

"வையத்தில் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

என்று பாடிய தெய்வப்புலவர் வள்ளுவரின் திருவாய் மொழிக்கேற்ப நேற்றுவரை எம்முடன் வாழ்ந்து இறை தாள்களைப்பற்ற அவர் இன்று எங்களைப் விட்டுப் பிரிந்து விட்டார்.

இலங்கைத் தீவில் வடமராட்சி, பருத்தித்துறை பொலிகண்டி, ஆழக்கிணற்றடி "மாணிக்கபவனம்" எனும் இல்லத்தில் 05.09.1933 அன்று இவர் பிறந்தார். அமரர்களான கதிர்காமு செல்லம்மா தம்பதியினரின் இனிய இல்வாழ்வின் இளைய மகளுமாவார். அமரர்களான செல்லையா, சின்னம்மா ஆகிய இருவரையும் மூத்த சகோதரனாகவும் மூத்த சகோதரியாகவும் கிடைக்கப் பெற்றார். அன்புச் செல்வங்களாக வாழ்ந்த இவர்கள் தமது சிறுவயதில் தகப்பனாரை இழக்கும் துர்ப்பாக்கிய நிலையை அடைந்தனர். இருப்பினும் தெய்வபக்தியும் கல்வி ஞானமும் கிடைக்கப் பெற்ற தாய்மாமன் கறுவல் மாணிக்கம் அவர்களின் அரவணைப்பிலும் வழிகாட்டலிலும் சீரும் சிறப்புமாக வாழ்ந்து வந்தார். உரிய பருவகாலமதில் அமரர் தங்கம்மா அவர்களுக்குப் பொலிகண்டி கிழக்கு இளையார் கிணற்றடியைச் சேர்ந்த வயிரவி சின்னாச்சி தம்பதியினரின் மகனான முத்துக்கிருஷ்ணனை கரம் பற்றிக் கொடுத்தனர்.

முத்துக்கிருஷ்னன் தங்கம்மா தம்பதியினர் இல்லறமாம் நல்லறத்தினை மிகவும் சிறப்பாக நடாத்தினர். இக்காலகட்டத்தில் அமரர் தங்கம்மாவின் ஒரே சகோதரி சின்னம்மா அவர்கள் சிறுபிள்ளைகளாக இருந்து தனது பிள்ளைகள் செல்வக்கதிரமலை, செல்வமலர் ஆகியோரைத் தவிக்கவிட்டு நோய் காரணமாக இளவயதில் இறக்க நேரிட்டது. அன்றிலிருந்து முத்துக்கிருஷ்னன் தங்கம்மா தம்பதியினர், செல்வக்கதிரமலை, செல்வமலர் ஆகிய இருவரையும் தமது பிள்ளைகள் போல வளர்த்தெடுத்தனர். மிகவும் செழிப்பாக வாழ்ந்தனர்; தானதருமம் செய்தனர்; விருந்தோம்பினர்; உற்றார், உறவினரைப் பேணினர்.

சிறுவயதில் தாயை இழந்த தமது பெறாமக்கள் திருமணவயதை அடைந்த போது அமரர் அவர்கள் தனது ஏக சகோதரர் செல்லையா அவர்களின் மகன் பரராஜசிங்கத்தை செல்வமலருக்கும் மகள் மல்லிகாதேவியை செல்வக் கதிரமலைக்கும் திருமணம் செய்து மகிழ்ந்தார்.

> “மங்கலம் என்பது மனைமாட்சி மற்று அதன்
> நன்கலம் நன்மக்கட் பேறு”

என்ற பொய்யாமொழிக்கு இலக்கணமாக சறோசாதேவி, தெய்வநாயகி, கதிர்காமலிங்கம், பத்மலிங்கம் என்னும் நான்கு குழந்தைச் செல்வங்களைப் பெற்றெடுத்தனர்.

இவ்வாறு இருக்கையில் அமரர் தங்கம்மா அவர்கள் ஓர் பேரிடியைச் சந்தித்தார். கணவர் முத்துக்கிருஷ்ணனை அவர்கள் 26.12.1979 இழந்தார். ஆனாலும் கலங்கினாரில்லை; கவலையை அகத்தே பூட்டினார்; மனதை திடமாக்கி வைரமாக்கினார்;. கடினமாக உழைத்தார். சிறுவயதில் பிள்ளைகள் கஷ்டதுன்பங்களை உணரக்கூடாது என்பதில் பெரும் அக்கறை கொண்டுழைத்தார்.

இவர் எந்த நேரமானலும் தன் கஷ்டத்தைப்பாராது பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றி மகிழ்ந்தார். பிள்ளைகளை உரிய முறையில் கல்வி கற்பித்து அவர்கள் நல்ல நிலையில் வாழ்வதற்கு வழி அமைத்துக் கொடுத்து மகிழ்ந்தார்.

தன் அன்புப் பிணைப்பில் வளர்ந்த செல்வக்கதிரமலை கட்டிளம் காளைப் பருவத்தை அடைந்ததும் தனக்குக் கீழுள்ள சகோதரர்களின் வளர்ச்சிக்காவும், கல்விக்காகவும் பாடுபட்டார். இது அமரர் அவர்களுக்கு ஓரளவு ஆறுதலைக் கொடுத்தது.

கால நீட்சியின் பயனாக, மூத்தமகள் சரோசாதேவியை அல்வாய் தெற்கைச் சேர்ந்த சிவதாஸ் சிவபாக்கியம் தம்பதியினரின் புத்திரர் விஜயசிறியை சீரிய முறையில் திருமணம் செய்து வைத்தார். இதன் பேறாக விஜேந்திரா, சஜேந்திரா என்ற பேரப்பிள்ளைகள் கிடைக்கப்பெற்றார்.

இளையமகள் தெய்வநாயகியை பொலிகண்டி கிழக்கைச் சேர்ந்த பன்னிருகரம் புவனேஸ்வரி தம்பதியினரின் மகன் ஜெயக்கொடியைத் திருமணம் செய்து கொடுத்து குந்தவி, வைஷ்ணவி, பிரேந்திரா ஆகியோரை பேரப்பிள்ளைகளாகக் கிடைக்கப்பெற்றார். அவர்கள் இன்று சுவிச்சலாந்தில் சிறப்பாக வாழ்ந்து வருகின்றனர். மூன்றாவது பிள்ளையாகிய கதிர்காமலிங்கம், மாணவர்கள்; ஆசிரியர்கள் என்போரால் போற்றிக் கொண்டாடப்படும் பொறுப்புணர்வும், கடமையுணர்வும் நிரம்பப் பெற்று தன்னலமற்ற சேவையை வழங்கும் அதிபராகக் யா/குடத்தனை கரையூர் அ.மி.த.க.பாடசாலையில் மிகச்சிறப்பாக கடமையாற்றிக் கொண்டிருக்கிறார். இவருக்கு பூநகரி கிராஞ்சியைச் சேர்ந்த தங்கராசா ஞானசுந்தரி தம்பதியினரின் மகளும் தற்போது ஆசிரியராக யா/நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலையில் கடமையாற்றும் தேவரஞ்சினியை மணம் செய்து கொடுத்து மகிழ்ந்தார்.

நாலாவதும் இளைய மகனுமாகிய பத்மலிங்கம் அவர்களுக்கு ஊரெழு கிருஸ்ணபிள்ளை பரமேஸ்வரி தம்பதியினரின் மகள் வெண்ணிலாவை திருமணம் செய்வித்து பேரப்பிள்ளைகளாக அட்சயா, நிகில், துபீசன் ஆகியோரைப் பேரப்பிள்கைளாகக் கிடைக்கப் பெற்று அகமகிழ்ந்தார் இவர்கள் லண்டனில் சந்தோசமாக வாழ்ந்து வருகின்றனர்.

இவ்வாறு பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், உற்றார் உறவினர், எல்லோருடனும் வாழ்ந்து வரும் காலகட்டத்தில் நீண்டகால கடின உழைப்பின் காரணமாக ஏற்பட்ட நோய் அவரின் உடலை வெகுவாகப் பாதித்தது. தொடர்ச்சியான வைத்தியச்சிகிச்சையைப் பெற்று வந்தார். இவ்வாறு இருந்த போதும் தனது நித்திய கருமங்களை தானே நிறைவேற்றி வந்தார். மற்றவர்களுக்கு சிரமம் கொடுக்காது வாழ்ந்து வந்தார்.

எல்லோரையும் ஏங்கித் தவிக்கவிட்டு ஏவிளம்பி ஆண்டு சித்திரை மாதம் 03ம் நாள் கேட்டை நட்சத்திரம் பஞ்சமித்திதியில் ஞாயிற்றுக்கிழமை அன்று பி.ப.5.10மணியளவில் (16.04.2017) திடீரென பேரின்பத்தைக்காணச் சென்று விட்டார். அவர் மறைந்தாலும் அவர் நினைவுகள் எங்கள் மனதை விட்டு என்றுமே அகலமாட்டாது. அவரது ஆத்மா சாந்தியடைவதாக.

திரு.செல்லையா பரராஜசிங்கம்.
ஓய்வு நிலை ஆங்கில ஆசிரிய ஆலோசகர்,
வடமராட்சி.

# வாழ்த்துரை

சமரபாகு சீனா உதயகுமார் அவர்களின் 'பண்டைத் தமிழரர் சிந்தனை மரபு' என்ற தலைப்பிலான நூலுக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். சமரபாகு சீனா உதயகுமார் தன்னுடைய பல்வேறு வகையான படைப்புகளினூடே இலங்கை மட்டுமல்லாது பிறதேசங்களிலும் நன்கு அறியப்பட்ட ஒருவர். இவர் இப்பொழுது புதிய தொரு புலம் சாந்த தன்னுடைய படைப்பு ஒன்றின் மீது வாசகர்களின் கவனத்தைக் கோரிநிற்கின்றார்.

யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்திலே தமிழில் முதுகலைமாணிக்கற்கை நெறியைச் சீனா உதயகுமார் பயின்ற போது எமக்கு இவர் அறிமுகமானார். ஐம்பதுக்கும் மேற்பட்ட மாணவர்கள் பயின்றபோதிலும் அவர்களுக்குள் ஏதோ ஒரு வகையில் தனித்துவம் மிக்கவராக உதயகுமார் காணப்பட்டார். அந்தத்தனித்துவம் பல்வேறு நிலைகளில் வெளிப்படவும் அடிப்படையில் 'அறிவியல்புலம்' சார்ந்த ஒரு கணித ஆசிரியராவார். இவர் எதனையும் அறிவியல் கொண்டே நோக்குவார். சொல்வதை வெறுமனே தலையாட்டி கேட்டு அமைதிகாணும் இயல்பு இவரிடத்தில் இருக்காது. குறித்த விடயம் சார்ந்த தனக்கு இருக்கக்கூடிய தெளிவின்மைகளை, பார்வைகளை உடனடியாகவே வெளிப்படுத்துவார் அவரிடம் எனக்குப் பிடித்த பண்புகளில் இவை பிரதானமானவை. விரிவுரைகளை எல்லோரதும் 'இருவழித்தொடர்பாடலாக' (Twoway communication) மாற்றி விடுவார் வகுப்பறை அளிக்கைகளில் பல்துறைசார்ந்த தனது வாசிப்புக்களினால் கிடைத்த பலவற்றையும் கோர்வை செய்து நுட்பமாக தொடர்புபடுத்தி அளிக்கை செய்வார்.

தமிழ் தொடர்பாகவும் தமிழர் தொடர்பாகவும் மரபாகச் சொல்லப்பட்டு வருகின்ற பல்வேறு விடயங்களிலும் இவருக்குப் பல்வேறு அபிப்பிராயங்கள் உள்ளன. அவ்வாறான அபிப்பிராயங்கள் மற்றும் வித்தியாசமான சிந்திப்புகளின் விளைவாகவே சீனாஉதயகுமாரின் இந்நூல் உருக் கொண்டுள்ளது.

பல்வேறு விடயங்கள் சார்ந்த ஏழு கட்டுரைகள் இந்நூலில் இடம் பெறுகின்றன. பேசு பொருளாலும், பேசுகின்ற முறைமையாலும் அவை முக்கியத்துவம் பெறுகின்றன. தமிழ் இலக்கண இலக்கியங்கள் மீது சீனா உதயகுமாருக்குள்ள ஆட்சியினை இந்நூலின் கட்டுரைகளின் வழிக்கண்டு கணிதப்புலமையினைத் தமிழ் இலக்கியங்களில் வருகின்ற கணிதம் சார்ந்த விடயங்களுடன் பொருத்தமுறை இணைத்து நோக்கியுள்ளமை சிறப்பானதாகும்.

தமிழ் ஆராய்ச்சி, தமிழில் ஆராய்ச்சியாக உருமாறி வேகமாக வளர்ந்து வரும் ஒரு சூழலில் ஆய்வுப்புலங்கள் தமக்கான எல்லைக் கதியால்களைக் கடந்து, ஒன்றுடன் ஒன்று இணைந்து (Inter Disciplining) ஆய்வுச் செயற்பாட்டை முன்னெடுக்க வேண்டும் என்பதை சீனா உதயகுமாரின் இந்த நூல் வலியுறுத்தி நிற்கிறது. 'விவேககணிதம்', பழந்தமிழ் பாடல்களில் கணிதம் முதலான கட்டுரைகள் இன்றைய இளம் ஆய்வாளர்களுக்கு முன்மாதிரிகளாக அமையக் கூடியவை பண்டைத்தமிழ்ப் புலவர்களுக்கு அறிவியல் புலங்களில் இருந்திருக்க கூடிய தாடனத்தை இக்கட்டுரைகள் வெளிக்காட்டுகின்றன இதுபோல பல்வேறு துறைசார்ந்த விடயங்களையும் தமிழ் இலக்கியங்களுடன் இணைந்து நோக்க முடியும்.

கவிஞனாக, சிறுகதையாசிரியனாக பத்தி எழுத்தாளனாக, விமர்சகனாக சீனாஉதயகுமாரைப் பார்த்த வாசகருலகம் இந்நூலின் வழி அவரது புதியதொரு ஆளுமைப் பண்பைக் கண்டு கொள்ளும்.

நல்ல ஒரு மாணவன் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு பல்வேறு நிலைகளிலும் எடுத்துக்காட்டாக விளங்கும் சீனாஉதயகுமாரின் பரந்த வாசிப்பு, வாசித்த விடயங்கள் தொடர்பான ஆரோக்கியமான உரையாடல், பணிவு, தன்னடக்கம் ஆசிரியர்களைப் போற்றும் தன்மை முதலான பண்புகள் பலருக்கும் முன்னுதாரணமானவை. மாணவனுக்கு ஆசிரியர் வாய்ப்பது போல ஆசிரியருக்கு மாணவன் வாய்ப்பது ஒரு வரம் தான்.

'நல்ல ஒரு மாணவன் தான் நல்ல ஒரு ஆசிரியரை உருவாக்குவான்' என்பது வெறும் மொழியல்ல

சீனா உதயகுமாரின் தெளிவான சிந்தனைகள் பலரையும் சீராகச் சென்று அடைய வேண்டும். வாசிப்புப் பழக்கம் குறைந்து வரும் இன்றைய சூழலில் இது போன்ற பயனுள்ள நூல்களை வாசகர் சமூகம் வாங்கிப் படித்துப் பயன்விளைக்க வேண்டும்.

இவ்வாறான ஒரு நூலினை அமரர் தங்கம்மா முத்துக்கிஷ்ணன் அவர்களின் நினைவாக ஆசிரியர்கள், மாணவர்கள், மற்றும் இலக்கிய வாசகர்கள் பயனுறும் வகையில் வெளியீடு செய்கின்ற அமரரின் குடும்பத்தினருக்கு எனது வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சமரபாகு சீனா உதயகுமார் இது போன்ற பயனுள்ள நூல்களைத் தமிழுலகுக்கு தொடர்ந்து தந்திட வேண்டும் என உளம் நிறைந்து வாழ்த்துகிறேன்.

பேராசிரியர். கி.விசாகரூபன்
பேராசிரியர்,
தமிழ்த்துறை,
கலைப்பீடம்,
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்.

## விருந்தோம்பலின் அமைதியான ஒரு தங்கம் எங்கள் வீட்டுத் தங்கம்மா

எனக்கு அப்ப பதினேழு வயது. க.பொ.த. (சா.தர) பரீட்சை பாசாகி க.பொ.த. (உ.தர) வகுப்பில் படித்துக்கொண்டிருந்த காலம். அப்போதுதான் லிங்கண்ணாவின் (கதிர்காமலிங்கம்) வீட்டிற்கு நானும் என் நண்பர்களும் சென்று பழகத் தொடங்கினோம். லிங்கண்ணாவின் வீட்டிலே எப்பொழுதும் இளந்தாரிப் பொடியள் வந்து போவார்கள். லிங்கண்ணாவின் தம்பி குட்டிலிங்கத்தின் சினேகிதர்களும் அங்கே வருவார்கள். இதனால் அந்த வீடு எப்பொழுதும் கலகலப்பாகவே இருக்கும்.

லிங்கண்ணாவின் பழைய வீட்டின் வடக்குப் புறமான விறாந்தையில் பொடியள் இருந்து பம்பல் அடிப்பார்கள். சிலர் கடதாசிக்கூட்டம் விளையாடுவார்கள். வேறு சிலர் சினிமா மற்றும் விளையாட்டு பற்றிய கலந்துரையாடலில் ஈடுபடுவார்கள். சினிமா பற்றிய தகவல்களைத் தருபவர்களில் முக்கியமானவர் லிங்கண்ணாவாகத்தான் இருக்க முடியும்.

நாங்கள் எல்லோரும் இது சிவாஜி படம்; இது எம்.ஜி.ஆர். படம்; இது ரஜினி படம்; இது கமல் படம் என்றுதான் சொல்லிக் கதைப்போம். ஆனால், லிங்கண்ணாவுடனான நெருங்கிய நட்பு நிலைக்குப் பின்னர்தான், இது மணிரத்தினம் படம்; இது பாலச்சந்தர் படம்; இது பாலுமகேந்திரா படம் என்று பேசத் தொடங்கினோம்.

ஒரு சினிமா படத்தை யார் இயக்கியது? யார் ஒளிப்பதிவு செய்தது? பாடல்களை யார் எழுதியது? அந்தத் திரைப்படத்திற்கு யார் இசை அமைத்தது? அப்பாடலை யார் பாடியது? போன்ற தகவல்களைச் சரியாகத் தருபவர்களில் ஒருவராக லிங்கண்ணாவும் இருப்பார்.

லிங்கண்ணாவுடன் நாங்கள் கதைத்துக்கொண்டு இருக்கிறபோது லிங்கண்ணாவின் அம்மா, சறோ அக்கா, அம்மன் அக்கா, குட்டிலிங்கன் என்று எல்லோரும் வந்து எங்களோடு உரையாடுவார்கள். இப்படியாக எங்கள் நட்பு காரணமாக, அந்த வீட்டில் மிக நெருக்கமான ஒரு உறவினைப் பேணி வந்தோம்.

தைப்பொங்கல், சித்திரை வருடப்பிறப்பு மற்றும் தீபாவளி போன்ற விசேட நாட்களில் நாங்கள் எல்லோரும் லிங்கண்ணாவின் வீட்டிற்கும், மதியண்ணாவின் வீட்டிற்கும் சென்று வரத் தவறுவதில்லை. மதியண்ணா வீட்டில் மதியண்ணாவின் அக்காமார் (ஒலியக்கா, குட்டியக்கா), எங்களை அனுசரித்து உபசரிப்பது போலவே லிங்கண்ணா வீட்டிலும் லிங்கண்ணாவின் அம்மா மற்றும் அக்காமார் எங்களை உபசரிப்பார்கள். இப்படியான விழாக்கள் வந்தால் இந்த இரு வீடுகளுக்கும் நாங்கள் போகத் தவறமாட்டோம். அப்படிப் போகத் தவறினால்கூட யாரிடமாவது சொல்லி விடுவார்கள். இந்த மாதிரியான அந்தக்கால நினைவுகளை நினைத்துப் பார்க்கிறபோது அழுகைதான் வருகிறது.

அந்தச் சின்ன வயதுக்காலத்தில் எங்களுக்குக் கிடைத்த அவர்களின் விருந்தோம்பல் முறைகளையும், அவர்கள் எங்கள் மீது காட்டிய அக்கறை மற்றும் மரியாதைகளையும் எங்கள் யாராலுமே என்றைக்குமே மறக்க முடிவதில்லை.

லிங்கண்ணா வீட்டில் கடதாசிக்கூட்டம் விளையாடிக் கொண்டிருக்கும் போது, பால் தேனீருடன் நொறுக்குத் தீனி ஏதாவது கொண்டு வந்து தந்துவிட்டு அந்தக் கதிரையில் இருந்துவிடுவார் தங்கம்மா அம்மா. நாங்கள் கடதாசிக்கூட்டம் விளையாடுவதையும் தங்கம்மா அம்மா பார்த்துக் கொண்டிருப்பார். இடையிடை எங்கள் ஒவ்வொருத்தராகக் தங்கம்மா அம்மா கதை கேட்பார்.

"அப்பா, அம்மா சுகமாக இருக்கினமே.."

"அக்காக்களுக்கு எங்காலும் சரிவந்திடுத்தோ..?"

"ஒரு நாளைக்கு உங்கட வீட்ட வரோணுமடா..!" என்றெல்லாம் கதை கேட்பார்.

இப்படியாக நானும் என் நண்பர்களும் அந்த வீட்டின் மீதான பழக்கத்தை அதிகரித்துக் கொண்டு பழகினோம். என் மூலமாக அந்த வீட்டில் நட்பினை ஏற்படுத்திய என் நண்பர்கள் நான் இல்லாவிட்டாலும் அவர்கள் அங்கே போய்வரத் தொடங்கினார்கள். தங்கள் வீடு போலவே பழகினார்கள். அந்தளவுக்கு தங்கம்மா அம்மாவின் நட்பு முறை என் நண்பர்களுக்கும் நன்கு பிடித்திருந்தது.

ஒரு நாள் சரஸ்வதிப் பூசை தினத்தன்று இரவுப்பொழுதிலே, அந்த ஊர்ப்பொடியளும் நாங்களும் சேர்ந்து கடதாசிக்கூட்டம் விளையாடிக் கொண்டிருந்தோம். பூசை முடிந்ததும் மோதகம், கொழுக்கட்டை, பொங்கல், அவல், கடலை, வடை என்று பெரிய தட்டிலே கொண்டு வந்து தங்கம்மா அம்மா வைத்தார். ஒவ்வொருத்தரும் தங்கள் வீடு போலவே உரிமையோடு பழகியதன் நிமித்தமோ, என்னமோ பொடியள் எல்லாரும் அடித்துப் புடித்து தட்டில் இருந்த உணவுகள் அனைத்தையும் உடனடியாகவே காலி செய்துவிட்டார்கள். பொடியள் என்றால் அப்படித்தானே. அந்தந்த வயதில் எல்லாம் அப்படித்தான். இதையெல்லாம் தங்கம்மா அம்மா பார்த்துக்கொண்டு சிரித்தபடி இருந்தார்.

அதில் ஒரு சின்ன பிரச்சினை நடந்துவிட்டது. அது என்னவென்றால், எனக்கும் அகிலண்ணாவுக்கும் எதுவுமே கிடைக்காமல் போய்விட்டன. இதை தங்கம்மா அம்மா கவனித்திருக்கிறார். உடனேயே அடுக்களைப் பக்கம் ஓடிச்சென்று இன்னுமொரு தட்டிலே கொண்டு வந்து எனக்கும் அகிலண்ணாவுக்கும் எனத்தந்தார்.

இதையெல்லாம் நான் ஏன் சொல்கிறேன் என்றால், ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு சிறப்பான குணம் காணப்படும். அந்தவகையில், ஒரு சிலரிடமே இப்படியான விருந்தோம்பல் குணம் இருக்கும். இயல்பாக இருக்கிற இந்தக் குணம், அவர்களுக்குக் கடவுள் தந்த பரிசு என்றுதான் நான் நினைப்பதுண்டு. அந்த ஊரிலே தங்கம்மா அம்மாவைத் அறிந்த பலரும் அவரின் இந்தவொரு பண்பினைச் சொல்லாமல் இருக்கமாட்டார்கள்.

எந்தவொரு வீட்டிலும் நடைபெறுகின்ற நிகழ்வுகள் எதுவானாலும் முன்னுக்கு நின்று ஒரு சபையை நடாத்துகிற பெண்களில் மூத்த உறுப்பினராக தங்கம்மா அம்மா காணப்படுவார். இப்படி முன்னின்று மற்றவர்களின் வைபவங்களில் பாடுபடுவது தங்கம்மா அம்மாவின் மனதுக்கு ஒரு சந்தோசம். இப்படியாக தங்ம்மா அம்மா அந்த ஊர் உறவுகளுக்கும் மற்றும் அயலூரில் உள்ள உறவுகளுக்கும் மிக முக்கியமான ஒரு பெண்ணாகப் கருதப்பட்டு வந்தார்.

தங்கம்மா அம்மாவின் வீட்டு வடக்குப் புறமாக உள்ள ஒரு அறை முழுவதும் புத்தகங்கள் இருந்தன. வீடொன்றிலே நூல் நிலையம் ஒன்றினை வைத்திருக்கலாம் என்ற ஓர் எண்ணத்தை எனக்குள் தோற்றுவித்ததும் அந்த வீடுதான்.

இந்திய எழுத்தாளர்களின் கதைகள், கட்டுரைகள் வாசிப்பதில் அம்மன் அக்கா ஆர்வமாக இருந்தார். அம்மன் அக்காவுக்கு வந்த கணவன் பொலிகை ஜெயாவும் இலக்கியக்காரனாக இருந்தார். சினிமா, விளையாட்டு, பொது விடயங்கள் சேர்த்து வைப்பதில் விருப்பமானவராக லிங்கண்ணா இருந்தார். இப்படியாக, அந்த வீட்டில் காணப்பட்ட புத்தக அறை பார்த்து நானும் வியந்தேன். இந்த எண்ணமே நானும் என் வீட்டில் புத்தகங்களைச் சேர்க்க வேண்டும் என்ற ஆர்வத்தைத் தூண்டியது. அப்ப எனக்கு வயது பதினெட்டாகும்.

இப்படியான வாசிப்புப் பழக்கமுள்ள லிங்கண்ணாவிற்கு மதியண்ணா மூலமாக இன்பர்சிட்டி தனியார் கல்வி நிலையமொன்றிலே சமூகக்கல்வி கற்பிக்கின்ற வாய்ப்புக் கிடைத்தது. அந்த வாய்ப்பினைத் தக்கபடி பயன்படுத்தினார். தன் தேடலின் வீச்சினை இன்னும் இன்னும் அதிகரித்தார். இதனால், லிங்கண்ணாவின் கற்பித்தல் திறன் அதிகரிக்க அதிகரிக்க அவரின் மென்மை இயல்பு பற்றியும், கற்பித்தல் திறன் பற்றியும் மாணவர்கள் பலரும் கதைக்கத் தொடங்கினர். இதற்குப் பிறகு கொற்றாவத்தை உதயதாரகை கல்வி நிலையத்தில் படிப்பிக்கின்ற வாய்ப்பினை அவர் பெற்றார். இதனால், கொற்றாவத்தை, சமரபாகு, நவிண்டில், வதிரி, பொலிகண்டி மாணவர்கள் அதிக பயனடைந்தார்கள். லிங்கண்ணாவின் இத்தகைய ஆற்றல் பற்றி அவரின் பழைய மாணவர்கள் என்னோடு உரையாடும் போது கேட்டிருக்கிறேன்.

இப்படியான காலப்பொழுதிலேதான் ஆசிரியர் தேர்வுக்கான போட்டிப்பரீட்சை ஒன்று நடைபெற்றது. அப்பரீட்சைக்குத் தோற்றிய அவர், அதிலே சித்தியடைந்து ஓர் அரச ஆசிரியர் நியமனம் பெற்றார். அப்போது அவரின் அம்மா, அக்காமார், தம்பி, மற்றும் ஒன்றுவிட்ட சகோதரர்கள், அத்தான்மார், உறவுகள் அடைந்த சந்தோசத்தை இன்றும் என்னால் மறக்க முடியவில்லை.

இந்தச் செய்தி அறிந்து லிங்கண்ணாவை வாழ்த்துவதற்காக அவர் வீட்டுக்கு நாங்கள் சென்றோம். அங்கே அந்த ஊரிலுள்ள பலர் வந்திருந்தார்கள். லிங்கண்ணாவை வாழ்த்தினார்கள். நாங்களும் வாழ்த்தினோம். இந்த இடத்தில், தங்கம்மா அம்மாவை நாங்கள் போய் சந்தித்தோம். இந்த சந்தோசமான செய்தியை எங்களிடம் சொல்லும் போது அவர் கண்கள் கலங்கி வந்தன.

தன் மகன் கல்வி, விளையாட்டு, தொழில் எதிலென்றாலும் உயர்ந்துகொண்டு போகும் போது அவற்றையெல்லாம் மனங்களால் ஆசிர்படுத்தி தூய்மை செய்பவள் ஓர் அம்மாவால்தான் முடியும். அந்த எண்ணப்பாங்கினை தங்கம்மா அம்மாவிடமும் நாங்கள் கண்டோம்.

இப்படி ஆசிரியர் தொழிலில் கால்பதித்த லிங்கண்ணா அதிபர் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றி அதிலும் மிகத்திறமையாகச் சித்தியடைந்தார். இந்தச் செய்தி கேட்ட தங்கம்மா அம்மாவின் சந்தோசத்தைப் பார்க்க முடியாது. அப்படி மனம் பூரித்துப் போய் இருந்தார். லிங்கண்ணாவை வாழ்த்துபவர்கள் தங்கம்மா அம்மாவையும் வாழ்த்தத் தவறவில்லை.

அந்த ஊரிலேயே தன் மகன்தான் அதிபர் பரீட்சையில் சித்தியடைந்த முதலாம் நபர் என்ற செய்தி தங்கம்மா அம்மாவிற்கு கடைசி வரைக்கும் யாருமே சொல்லாமல் போனது என்பது மிகவும் வேதனைாயன விடயமாகும்.

ஒரு மனிதனுடைய எண்ணம் என்னவாக இருக்கிறதோ அதுவே அவனாக இருக்கிறது. இந்த எண்ணங்களின் திரட்சியே அவனது சந்ததியின் உயர்வுக்கும் தாழ்வுக்கும் வழி கோல முடியும்.

காந்த விசைகள் ஊட்டப்பட்ட ஓர் இரும்புத் துண்டால் தன் எடையைப் போல் பன்னிரண்டு மடங்கு எடையுள்ள பொருட்களைத் தூக்க முடியும் என்று விஞ்ஞானம் கூறுகிறது.

ஆனால், அதே இரும்புத் துண்டிலிருந்து அந்தக் காந்த விசைகள் நீக்கப்பட்டால் அந்த இரும்புத் துண்டால் ஒரு பறவையின் இறகைக்கூட அதனால் தூக்க முடியாது.

ஆகவே, ஒருவர் தன் நல்ல எண்ணங்களால் மற்றவர்களைக் கவர்ந்திழுத்து விடுகிறார். இந்தமாதிரியான எண்ணங்களோடு மற்றவர்களின் எண்ணங்கள் கலவையுறும் போது மற்றவரும் அந்த நல்ல எண்ணத்தைப் பெற்றுவிடுவார்.

இந்த எண்ண அதிகரிப்பு என்பது துவித எண்ணகளின் அடுக்குகளின் வீதத்தில் அதிகரித்துச் செல்ல, அப்படியானவர்களின் எண்ண விசைக்கோடுகளால் முன்னையவரின் சந்ததியினை வாழ வழி காட்டிக்கொண்டே இருக்கும்.

இங்கே தங்கம்மா அம்மாவின் அந்த உயரிய சிந்தனைதான் அவரது பிள்ளைகளையும், அவரது பரம்பரையினையும் வாழ்வாங்கு வாழ வைத்துக்கொண்டு இருக்கிறது.

அவர்கள் கல்வி, கலை, விளையாட்டு என்று அத்தனையிலும் மிளிர வழிகாட்டிக் கொண்டிருக்கிறது. இது, இங்கே நல்ல முறையில் வாழ்ந்து மறைந்த பலரின் வாழ்வியல் முறை சார்ந்து நோக்கலாம். ஒருவரையோ அல்லது பலரையோ குறை கூறிக்கொண்டு திரிவதால் குறை கூறுபவர்கள் நல்லவர்கள் என்றும் மற்றவர்கள் கெட்டவர்கள் என்றும் என ஒரு முடிவுக்கு வந்துவிட முடியாது.

நீ திருந்து உலகம் தானாகத் திருந்தும் என்றுதான் சுவாமி விவோனந்தரும் சொல்லியிருக்கிறார். ஆகவே, மற்றவர்களின் உயர்ச்சி நிலையின் போது முகத்து முகம் நின்று போலியாக வாழத்தி விட்டு அடுத்த இடம் போய் வாழ்த்தப்பட்டவர்களைத் தூற்றுவதை விட, அப்படியான மனம் படைத்தவர்கள் வேறு யாரையும் வாழ்த்தாமல் இருந்தாலே போதுமானதாகும். ஏனென்றால், மற்றவர்கள் ஓரளவு வாழ்ந்து விடுவார்கள்.

இன்று தங்கம்மா அம்மாவின் பிள்ளைகள் போலவே அவருடைய பேரப்பிள்ளைகளான குந்தவி ஜெயக்கொடி, வைஸ்ணவி ஜெயக்கொடி ஆகிய இருவரும் சின்ன வயதிலே முதுமானிப் பட்டப்படிப்பினை முடித்து நிதி நிறுவனங்களில் தொழில் புரிந்து உழைத்து வருகிறார்கள். அவர்கள் போலவே, ஜெயக்கொடி பிரேந்திரா பல்கலைக்கழத்தில் மூன்றாம் வருடக் கற்கை நெறியினை மேற்கொண்டு வருகிறார்.

இவர்கள் போலவே திரு.திருமதி.விஜயசிறி சறோசாதேவி தம்பதியினரின் இரண்டு புதல்வர்களான சஜேயும்,விஜேயும் திரு.திருமதி.பத்மலிங்கம் நிலா தம்பதிகளின் பிள்ளைகளான அட்சயா, நிகில், துபீசன் ஆகிய மூவரும் படிப்பு, விளையாட்டு, கலை என்று தங்கள் திறமைகளைக் நிரூபித்து வருகின்றனர். அவர்களும் முன்யைவர்கள் போல் சாதிப்பார்கள் என்று நம்பலாம்.

விருந்தோம்பலின் ஒரு தங்கம்! எங்கள் வீட்டுத் தங்கம்மா!! என்று ஊரவர்களாலும் மற்றவர்களாலும் போற்றப்பட்டு வந்த அமரர்.தங்கம்மா முத்துக்கிருஸ்ணன் அவர்களின் முப்பத்தோராம் நினைவாக "பண்டைத்தமிழர் சிந்தனை மரபு" எனும் இந்த இலக்கிய நூலினை வெளியிட வேண்டும் என்று அவரது குடும்பத்தினர் விரும்பி என்னைக் கேட்டபோது, அதற்கான வேலைகளில் நான் ஈடுபடத்தொடங்கினேன்.

இப்படியான என் செயற்பாட்டிற்காக ஒத்தாசை நல்கிய அமரரின் குடும்பத்திற்கும், நூலுக்கான அணிந்துரையினையும் நூலிற்கான தலைப்பினையும் தந்துதவிய என் பேராசான் பேராசிரியர்.கி.விசாகரூபன் அவர்களுக்கும், அமரரின் வாழ்க்கை வரலாறு எழுதி உதவிய ஓய்வுநிலை ஆங்கில ஆசிரிய ஆலோசகர் செ.பரராஜசிங்கம் அவர்களுக்கும், மற்றும் நூலுக்கான ISBN குறியீட்டு இலக்கம் பெற்றுத் தந்த கொழும்பு திறந்த பல்கலைக்கழக சிரேஸ்ட விரிவுரையாளர் முனைவர் தேவராஜா முகுந்தன் (தேவமுகுந்தன்) அவர்களுக்கும், அட்டைப்படத்திற்கான படம் ஒன்றினை இணையத்தில் இருந்து பெற்று உடனேஅனுப்பி வைத்த விமர்சகர், கவிஞர் சின்னராஜா விமலன் மற்றும் எனக்கு எப்பொழுதும் போலவே தோளோடு தோள் நின்று ஒத்தாசை புரிகின்ற மருத்துவர் கே.எஸ்.பத்மநாதன், மிதிலாக்கா, திரு.சின்னத்தம்பி இன்பரூபன், திரு.தேவராஜா

ஆகியோருக்கும் என்னுடைய ஆக்கங்கள் வெளிவர உதவிய பத்திரிகை சஞ்சிகை ஆசியர்களான, பாரதி அண்ணா, புலோலியூர் ஆ.இரத்தினவேலோன், விசு கருணாநிதி, ரேணுகா பிரபாகரன், மருத்துவர்.தி.ஞானசேகரன், ஜீவநதி பரணிதரன் ஆகியோருக்கும் என் மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

வாழும் காலங்களில் ஊரவர் மனங்களில் தங்கமென வாழ்ந்து எல்லோருக்கும் முன்னுதாரணமாகத் திகழ்ந்த அமரர் தங்கம்மா முத்துக்கிருஸ்ணனின் பாதங்களிற்கு இந்த நூலப் படையலை அர்ச்சித்து சமர்ப்பணம் செய்கிறேன். நன்றி.

-சமரபாகு சீனா உதயகுமார்.

# 01.

## பழந்தமிழ் பாடல்களில் கணிதம்

**அறிமுகம்:**

"கல்தோன்றா மன்தோன்றாக் காலத்தே வாளோடு முன் தோன்றிய மூத்தகுடி" என்று தமிழ்ப் பரம்பரைக்கு ஒரு பெருமை உண்டு.

இங்கே கல் என்பதன் அர்த்தம் கல்வியினைக் குறிக்கிறது. அதாவது, அறிவினைக் குறிக்கிறது. மன் என்பது மன்னராட்சி என்பதையும். வாளோடு என்பது வீரத்தோடு எனும் பொருளையும் குறிக்கிறது.

கல்தோன்றா என்றால் அறிவு தோன்ற முன்னர் என்று அர்த்தமாகும். மன்தோன்றாக் காலத்தே என்றால் மன்னராட்சி தோன்றுவதற்கு முன்னராகவே என்று பொருளாகும். வாளோடு முன்தோன்றிய மூத்த குடி என்பது வீரத்தோடு தோன்றிய முதல் குடி என்பதாகும்.

கல்வியும் மன்னராட்சியும் தோன்ற முன்பாகவே வீரத்தோடு தோன்றிய முதல்குடி தமிழ்க்குடியாகும். ஆனால், இன்று இதற்கான பொருள் மாறியிருப்பதுதான் விந்தையானது.

"கல் தோன்றா மண் தோன்றாக் காலத்தே வாளோடு முன் தோன்றிய மூத்தகுடி" என்று கூறி வருகிறார்கள். இப்படிக் கூறுவது தவறாகும்.

பூமி என்பது கல்லாலும் மண்ணாலும் உருவானது. கல்லும் மண்ணும் தோன்றுவதற்கு முன்பாகவே; பூமி உருவாகுவதற்கு முன்பே தமிழினம் உருவாகி விட்டது என்று கூறுவது அப்பட்டமான பொய்யாகும்.

**தமிழும் தமழரும்:**

எந்தவொரு வரலாற்றையும் அறிவதற்கு கல்வெட்டுகள், சிற்பங்கள், இலக்கியங்கள், ஓவியங்கள், பாடல்கள் என்பற்றை ஆதாரமாகக் கொள்கிறோம்.

எகிப்திலே உள்ள பிரமிடு உலக அதிசயங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. இந்த பிரமிடு என்பதற்குப் பின்னால் மறைந்திருக்கிற தமிழும், தமிழர் பற்றியதுமான ஒரு விடயத்தைச் சின்னதாகச் சொல்கிறேன் கேளுங்கள்.

தமிழிலே இடுதல் என்றால் புதைத்தல் என்று பொருளாகும். இதனால்தான், இறந்தவர்களைப் புதைக்கின்ற இடத்தினை இடுகாடு என்று அழைத்தனர்.

சாதாரண மக்கள் இறந்தால் சிறுகுழியில் இட்டு அந்த இடத்தில் சிறுமேடு ஒன்றினை அமைத்து விடுவர். இதனைச் சிறு இடு என்று அழைத்தனர்.

இதேபோல், மன்னர்கள்; படைத்தளபதிகள்; புலவர்கள் யாராவது இறந்தால் பெரும் இடு அமைத்தனர். இந்தப் பெரும் இடு பெரும்பாலும் கூம்பக வடிவுள்ளதாக இருக்கும். பெரும் இடு என்பதன் புணர்ச்சி வடிவமே பெருமிடு ஆகும்.

பெருமிடு என்ற தமிழ்ச் சொல்லே காலப்போக்கில் பிரமிடு என்று எகிப்தில் அழைத்து வந்தனர். பெருமிடு என்பது ஆங்கில உச்சரிப்பிலே perumidu என எழுதப்படலாம். இது காலப்போக்கிலே piramidu என மாற்றமாகி pyramidu எனவும் இறுதியாக pyramid எனவும் மருவி வந்திருக்கலாம். இதுவே, பிற்காலத்தில் Pyramid என்று ஆங்கிலச் சொல்லாக மாற்றம் பெற்றிருக்கிறது. இன்று Pyramid என்பதற்கு கூம்பகம் என்று தமிழில் மொழிபெயர்த்திருக்கிறார்கள்.

கிரேக்கம், இலத்தீன், ஜெர்மன் மொழிகளின் கூட்டுக்கலவையே ஆங்கிலமொழி என்று சொல்லும் அறிஞர்கள், இந்த கிரேக்கம், இலத்தீன், ஜெர்மன் மொழிகளில் 50% அளவு தமிழ் பரம்பல் இருப்பதாகவும் கூறுகிறார்கள். ஆங்கிலத்தில் உள்ள சில சொற்களே அதற்குச் சான்றாகும்.

உதாரணமாக, தமிழிலே கரைதல் என்றால் கத்துதல் என்று பொருள். இதிலிருந்து பிறந்ததே Cry எனும் ஆங்கிலச் சொல்லாகும். அதனால்தான் காகம் கரைகிறது என்கிறோம்.

Kill என்ற ஆங்கிலச்சொல்லுக்குக் கொல் என்று சொல்கிறோம். Button என்பதற்கு பொத்தான் என்கிறோம். இந்த ஆங்கில உச்சரிப்புக்கும் தமிழ் உச்சரிப்புக்கும் உள்ள ஓசை மிக மருவி உள்ளதையும் அவதானிக்கலாம்.

இப்படி இன்னும்...

பேசு, பஞ்சு, மெது, பரவி, உடன், நாகம் எனும் தமிழ் சொற்களோடு முன்னொட்டாக S இணையும்போது தோன்றிய ஆங்கிலச் சொல்லின் அதிசயத்தைப் பாருங்கள். அவை அவ்வாறு இணைந்து உருவான அந்த ஆங்கிலச் சொல்லுக்கான தமிழ்ப்பதமும் சமமாகவே இருக்கிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| i. | S+பேசு | = | Speach | (S+Peachu) |
| ii. | S+பஞ்சு | = | Sponge | (S+panghu) |
| iii. | S+மெது | = | Smooth | (S+methu) |
| iv. | S+பரவி | = | Spray | (S+paravy) |
| v. | S+உடன் | = | Sudden | (S+udden) |
| vi. | S+நாகம் | = | Snake. | (S+nakem) |

இவை உதாரணத்திற்கு எடுக்கப்பட்ட சில சொற்கள் அகும்.

### பைதகரஸ் தேற்றம்

*ஓடும் நீளம் தனை ஒரே எட்டுக்*
*கூறு ஆக்கி கூறிலே ஒன்றைத் தள்ளி*
*குன்றத்தில் பாதியைச் சேர்த்தால்*
*வருவது கர்ணம் தானே.*

*-புலவர் போதனார்.*

இக்கணித முறையைக் கொண்டுதான், அக்காலத்தில் குன்றுகளின் உயரம் மற்றும் உயரமான இடத்தை அடைய தாம் நடந்து செல்ல வேண்டிய தூர அளவு போன்றவற்றைக் கணக்கிட்டுள்ளனர் அந்தக்கால மனிதர்கள்.

புலவர் போதனார் சொன்ன இத்தேற்றத்தின் சிறப்பம்சம் என்னவென்றால், வர்க்கமூலம் இல்லாமலேயே, இக்கணித முறையை யாரும் பயன்படுத்த முடியும் என்பதாகும்.

இங்கே ஓடும் நீளம் என்பது தரப்பட்ட இரண்டு பெறுமானங்களில் நீளம் கூடியதாகும். குன்றம் என்பது தரப்பட்ட இரண்டு பெறுமானங்களில் நீளம் குறுகியதாகும்.

உதாரணமாக 3, 4 என்பவற்றை நோக்குவோம். இந்த இரண்டு பெறுமானங்களில் நீளம் கூடியது 4 ஆகும். நீளம் குறைந்தது 3 ஆகும். கர்ணம் என்பதன் ஒத்தசொல் செம்பக்கம்.

ஓடும் நீளம்தனை ஒரே எட்டுக்கூறாக்குதல் $= \frac{4}{8}$

$= \frac{1}{2}$

கூறிலே ஒன்றைத் தள்ளுதல் $= 4 - \frac{1}{2}$

$= 3\frac{1}{2}$

$= \frac{7}{2}$

குன்றத்தில் பாதி சேர்த்தல் $= \frac{7}{2} + \frac{3}{2}$

$= \frac{10}{2}$

$= 5$

வருவது கர்ணம் = வருவது செம்பக்கம்.

செம்பக்க நீளம் 5 அலகாகும்.

ஆனால், பைதகரஸ்தேற்றத்தின்படி $= 3^2 + 4^2$

$= 9 + 16$

$= 25$

$= 5^2$

இனி 5, 12 என்பவற்றை நோக்குவோம்.

ஓடும் நீளம்தனை ஒரே எட்டுக்கூறாக்குதல் $= \frac{12}{8}$

$= \frac{3}{2}$

கூறிலே ஒன்றைத் தள்ளுதல் $= 12 - \frac{3}{2}$

$= 12 - 1\frac{1}{2}$

$= 10\frac{1}{2}$

$= \frac{21}{2}$

குன்றத்தில் பாதி சேர்த்தல் $= \frac{21}{2} + \frac{5}{2}$

$= \frac{26}{2}$

$= 13$

ஆனால், பைதகரஸ் தேற்றத்தின்படி $= 5^2 + 12^2$

$= 25 + 144$

$= 169$

$= 13^2$

**வட்டமொன்றின் சுற்றளவு**

இன்று நாம் அனைவரும் வட்டத்தின் சுற்றளவை கணிப்பதற்கு $2\pi r$ அல்லது $\pi d$ எனும் சூத்திரங்களை பாவிக்கிறோம். இச்சூத்திரம் பற்றிய உண்மை பழந்தமிழ் இலக்கியப் பாடல் ஒன்றிலே காணப்படுகிறது என்று சொன்னால் உங்களால் நம்ப முடியுமா?

வட்டத்தின் சுற்றளவை கணிப்பதற்கு காக்கை பாடினியத்தில் ஒரு சூத்திரம் பாடலாக இருக்கிறது. காக்கை பாடினியத்தைப் பாடியவர் காக்கைபாடினியார் ஆவார். இந்த நூல் தோன்றிய காலமாக கி.பி. ஆறாம் நூற்றாண்டு என அறிஞர்கள் கூறுகின்றனர்.

காக்கை பாடினியம் செய்யுள் இலக்கணம் கூறும் ஒரு தமிழ் இலக்கண நூலாகும். இந்த நூல் முழுமையான அளவில் தற்காலத்தில் கிடைக்கவில்லை. இலக்கண நூல்களுக்கு உரை எழுதிய ஆசிரியர்கள் இந்த நூலின் நூற்பாக்களை தம் கருத்துக்கு வலிமை சேர்க்கும் வகையில் மேற்கோள்களாகக் காட்டியுள்ளனர். இந்த நூற்பாக்களையெல்லாம் தொகுத்து இதனை ஒரு தனி நூலாக அண்மையில் உருவாக்கியுள்ளனர். இதில் 89 நூற்பாக்கள் உள்ளன.

இனி நான் சொல்ல வருகிற விடயத்தின் பாடலையும் பாடலின் உட்பொருள் விளக்கத்தையும் பார்ப்போம்.

*விட்டமோர் ஏழு செய்து*
*திகைவர நான்கு சேர்த்து*
*சட்டென இரட்டி செயின்*
*திகைப்பன சுற்றுத்தானே*

*-காக்கைபாடினியார்*

பரிதி c எனவும் விட்டம் - d எனவும் ஆரை - r எனவும் எடுத்துக்கொள்வோம்.

கணிதத்திற்கென்று சில மொழிகள் உண்டு. அதாவது, சில சொற்களுக்கு குறியீடுகள் அல்லது அடையாளங்களைப் பயன்படுத்துவது வழமை ஆகும்.

கூட, கூட்டுத்தொகை, விஞ்சுகிறது, மொத்தத்தொகை போன்ற சொற்பதங்கள் வரும் இடங்களில் '+' அடையத்தைப் பயன்படுத்துகிறோம்.

வித்தியாசம், குறைய, கழிக்க போன்ற சொற்கள் வரும் இடங்களில் '-' எனும் அடையாளத்தைப் பயன்படுத்துகிறோம்.

மடங்கு, பெருக்க போன்ற சொற்கள் வரும் இடங்களில் 'x' எனும் அடையாத்தைப் பயன்படுத்துகிறோம்.

வருவது, தருவது, பெறுவது, சமன் போன்ற சொற்கள் வரும் இடங்களில் '=' எனும் அடையாளத்தைப் பயன் படுத்துகிறோம்.

உதாரணமாக: ஓர் எண்ணினை 5 ஆல் பெருக்கி 7 ஐக் கூட்டி 2 இனைக் கழித்தால் வருவது 50 ஆகும்.

இங்கே, அந்த எண்ணினை a என எடுத்துக்கொள்வோம். பெருக்கி எனும் சொல்லுக்கு 'x' எனும் அடையாளமும், கூட்டி எனும் சொல்லுக்கு '+' எனும் அடையாளமும் கழிக்க '-' எனும் சொல்லுக்கு எனும் அடையாளமும் வருவது எனும் சொல்லுக்கு '=' எனும் அடையாளமும் இட்டுப் பாருங்கள், குறித்த சமன்பாட்டை இலகுவில் பெற்றுவிடலாம்.

$5a + 7 - 2 = 50$ என்பது பெறப்பட்டு விடும்.

இவை போலவே, இன் எனும் சொல்லுக்கு 'x' எனும் அடையாளம் இடுவது போல ஓர் என்ற சொல்லுக்கு வகுத்தல் அடையாளத்தை இட்டுக் கொள்கிறோம்.

விட்டமோர் ஏழு செய்து $= \frac{d}{7}$ (விட்டத்தை 7 ஆல் வகுத்தல் என்று பொருள்)

திகைவர நான்கு சேர்த்து $= d + \frac{d}{7}$

$= 11\frac{d}{7}$

(7 ஆல் வகுத்த பெறுமானத்தின் 4 மடங்கினை விட்டத்தோடு கூட்டு என்று பொருள்)

சட்டென இரட்டி செயின் $= 2 \times 11\frac{d}{7}$

$= \frac{22}{7}d$

(மேலுள்ள பெறுமானத 2 ஆல் பெருக்கு என்று பொருள்)

$= \frac{22}{7}d$

$= \pi d$

திகைப்பன சுற்றுத்தானே = கிடைப்பது பரிதி ஆகும்.

தற்காலத்தில் $\frac{22}{7} = \pi$ எனப் பிரதியிட்டுக் கொள்கின்றோம்.

மேலும் விட்டம் என்பது ஆரையின் இரண்டு மடங்காகும். அதாவது $d = 2r$ ஆகும். சுற்றளவு $C = \pi d$ என்பது $C = \pi \times 2r$ என பிரதியிடும் போது $2\pi r$ எனும் சூத்திரம் கிடைத்து விடுகிறது. ஆக இன்று வட்டத்தின் சுற்றளவு காண பயன்படுத்தப்படும் சூத்திரத்தினை அன்றைய தமிழன் $\pi$ இனைப் பயன்படுத்தாமலே கணித்துள்ளான் என்பது பெருமையான விடயமே ஆகும்.

## வட்டமொன்றின் பரப்பளவு

*வட்டத் தரை கொண்டு*
*விட்டத் தரை காண*
*சட்டென்று தோன்றும் குழி* எனும் பாடலை காக்கை பாடினியார் பாடியுள்ளார்.

சரி இனி பாடலின் விளக்கம் பார்ப்போம்.

வட்டத் தரை = சுற்றளவில் பாதி.
கொண்டு = அந்த அளவைக் கொண்டு.
விட்டத்து அரை = ஆரை.
காண = பெருக்கு.

சட்டென்று தோன்றும் குழி = குழியின் அளவு என்பது பரப்பளவைக் குறிக்கிறது.

பரிதியின் அரைவாசியை விட்டத்தின் அரைவாசியால் பெருக்க வருவது பரப்பளவு என்பதே மேற்படி பாடலின் உண்மை விளக்கமாகும்.

பரிதி = C எனவும், விட்டம் = d எனவும், பரப்பளவு = A எனவும் எடுத்துக்கொள்வோம்.

அதாவது, $\frac{c}{2} \times \frac{d}{2} = A$ ஆகும். ------------------------------ (1)

ஆனால், $c = 2\pi r$, $d = 2r$ ஆகும்.

இவற்றினை முதலாம் சமன்பாட்டில் பிரதியிட,

$$\frac{2\pi r}{2} \times \frac{2r}{2} = A$$

$$\pi r^2 = A$$

இதுவே தற்காலத்தில் வட்டமொன்றின் பரப்பளவு கணிப்பதற்குப் பயன்படுத்தப்படும் சூத்திரமாகும்.

# 02.

## சிங்ககத் தீவு

ஈழத்தமிழர், தமிழ்மொழி, சிங்கைநகர் போன்ற சொற்டொர்கள் பற்றி ஆய்வு செய்யும் போது என் மனதிலே ஓர் எண்ணம் தோன்றியது. அந்த எண்ணத்தை இங்கு நான் சொல்வது சரியா? அல்லது தவறா? என்ற விடயம் ஆய்வுக்குரியதாகும். இருந்தாலும் சில விடயதானங்களையும் என்னுள் கிளர்ந்த ஐயங்களையும் இதிலே சொல்லுவது சாலப்பொருத்தம் என நினைக்கின்றேன். அதற்காக, ஈழத்து வரலாற்றின் சில பகுதிகளைச் சொல்லிக் கொண்டு போகவேண்டி வரும். மனம் கசக்காது படித்துப் பாருங்கள். தவறிருந்தால் சுட்டிக் காட்டுங்கள்.

சரி, இனி விடயப்பரப்பிற்கு வருகிறேன்.

யாழ்ப்பாணத்துக் காக்கைகள் எல்லாம் இரவில் தூங்குவதற்காக, யாழ்ப்பாணத்துக்கு அண்மையிலுள்ள ஒரு தீவினை நோக்கிப் பறந்து சென்று அங்கு ஒய்வெடுத்துத் தூங்குமாம். அப்படித் தூங்கிவிட்டு அதிகாலையிலே யாழ்ப்பாணம் நோக்கிப் பறந்து வருமாம். அத்தீவினையே காக்கைதீவு என பெயர் வைத்து அழைக்கலாயினர்.

அங்கு வாழும் பறவைகளில் பெரும்பாலானவை காகங்கள் என்ற காரணத்தால், அத்தீவினை காக்கைதீவு என்று அழைத்தனர். அதற்காக, அங்கு வேறு எந்தப் பறவைகளும் வாழவில்லை என்ற முடிவுக்கு யாரும் வந்துவிட முடியாது. அத்தோடு காக்கைகள்தான் அத்தீவின் ஆதிப்பறவைகள் என்ற முடிவிற்கும் வந்துவிட முடியாது. அல்லது போனால், அங்கு வாழும் காக்கைகள் அல்லாத மற்றப் பறவைகள் பிற்காலத்தில் வந்து சேர்ந்தவை எனும் சிந்தனையினையும் வளர்த்துவிட முடியாது.

ஆகவேதான், இலங்கையில் பெரும்பான்மையினர் சிங்களவர்கள் எனும் காரணத்திற்காக சிங்களதேசம் என்றோ அல்லது சிங்களத்தீவு என்றோ இலங்கைத்தீவினை அழைத்து விட முடியாது. அதுமட்டுமன்றி, சிங்களவர்தான் ஈழத்தின் ஆதிக்குடியினர் எனும் முடிவுக்கும் வந்துவிட முடியாது. அப்படி நினைத்தல் தவறானதாகும்.

இலங்கையில் வரலாற்றுத் தொடக்க காலத்திலிருந்து வாழ்பவர்கள் தமிழர்கள் மட்டுமே; சிங்களவர்கள் வந்து தங்கிய குடியினரே! அதற்கான ஆதாரங்கள் பல உள்ளன. அவற்றில் சிலவற்றினை இங்கே பரிமாறலாம் என எண்ணுகிறேன்.

இலங்கையின் வரலாற்றைக் கூறுவதாகக் கருதப்படும் மகாவம்சத்தில், இலங்கையைச் சிங்களத்தீவு என அழைத்ததற்கான அடையாளங்கள் எதுவும் சொல்லப்படவில்லை.

வட இந்திய மன்னன் அசோகனிடம் புத்த துறவிகள் பலர் இருந்துள்ளனர். இவர்கள் புத்த மதத்தை வளர்க்கிறோம் என்ற தோரணையில் பிற மதத்தவர்களைத் தம் மதம் சார்ந்து கவர்ந்து விடுவதற்குப் பல பிரயத்தனங்களில் ஈடுபட்டனர் என்று மகாவம்சம் கூறுகிறது.

இந்த வகையில், ஈழத்திலே சிவனை வழிபட்டு வந்த சைவ சமயத்தவனாகிய நாக அரசன் தேவநம்பியதீசனுக்கு புத்தசமயம் அறிமுகப்படுத்தப்படும் வரை இலங்கையில் புத்தரும் இல்லை; பௌத்தர்களும் இல்லை; அதுமட்டுமன்றி சிங்களமொழியோ சிங்கள இனமோ என்று எதுவுமே இங்கு இருக்கவில்லை.

இன்னுமொரு விடயம், ஒருவன் புத்தசமயம் என்பதற்காக அவனைச் சிங்களவன் என்றோ, ஒரு பிரதேசத்தில் புத்தகோயில்கள் இருந்தன என்பதற்காக அப்பிரதேசத்தில் சிங்களவர் வாழ்ந்தனர் என்றோ சொல்லிவிட முடியாது.

இந்தியாவில் பௌத்தம் அழிந்து போவதை அவதானித்த அனுராதபுர மகாவிகாரையின் தமிழ் பிக்குகள் பலர் வேறுபல இன மொழியைச் சேர்ந்த பௌத்தர்களை இணைத்து, இந்தியாவிலுள்ள புராணக் கதைகளை அவற்றினோடு இட்டுக்கட்டி விஜயன் என்ற கதாபாத்திரத்தின் கீழ் சிஹல என்ற இனக்குழுவை உருவாக்கினர் என்று மகாவம்சம் கூறுகின்றது.

இப்படியாக ஒரு தெளிவில்லாத காரணத்தையே காலகாலமாக சொல்லி வந்துள்ளனர். இதற்காக மகாவம்சம் என்ற நூலினைக் காரணம் காட்டியுள்ளனர். ஆனால், மகாவம்சம் என்ற நூலானது காலத்திற்குக் காலம் இலங்கையினை ஆட்சி செய்த சிங்கள் ஆட்சியாளர்கள் ஒருசிலரால் மாற்றி எழுதப்பட்டு வந்த ஒரு நூலாகும்.

தங்கள் இன இருப்பின் தொன்மை பற்றியும், சிங்கள மொழியின் ஆதி பற்றியும் தம் மக்களிடையே செயற்கையாய் உருவாக்கும் ஓர் எண்ணமாக இச்செயற்பாடு இருந்திருக்கிறது.

இத்தகைய சிங்கள ஆட்சியாளர்களிடம் யதார்த்தமான ஒரு சிந்தனைப் போக்கு இருந்திருக்கவில்லை என்பது வெள்ளிடை மலையாகும். அதாவது பொய் சொன்னாலும் பொருந்தச் சொல்ல வேண்டும் என்ற யதார்த்த நிலை புரியாதவர்களாக இருந்திருக்கின்றனர்.

ஏனென்றால், பல பழமையான வரலாற்று ஆதாரங்களும், பிராமி கல்வெட்டுகளும்; குகைகளில் எழுத்தப்பட்ட எழுத்துகளும்; பாளி நூல்கள் போன்றவையும்

தமிழர்; டமேடா; டமெலா; தமிழா; தெமல எனக் குறிப்பிடப்படும் இனக்குழுவினர் இலங்கையில் தொன்றுதொட்டு வாழ்ந்தனர் என்பதை தெளிவாகக் குறிப்பிடுகின்ற ஆதாரங்களாகும்.

ஆனால், தொன்றுதொட்டு இலங்கைத்தீவிலே சிங்கள இனக்குழுவினர் வாழ்ந்ததற்கான ஆதாரங்கள் எவையும் காணப்படவில்லை. மேலும், தமிழர்கள் வாழ்ந்ததற்கான எச்ச அடையாளங்கள் பலவற்றைக் காலாகாலமாக திட்மிட்டு மறைக்கப்பட்டிருக்கின்றன; மறைக்கப்பட்டு வருகின்றன என்பதே உண்மை ஆகும். உதாரணமாக, அண்மைக்காலத்தில் அனுராதபுர சந்திர வட்டக்கல்லிருந்த எருதுச்சின்னம் அகற்றப்பட்ட விடயத்தினைக் கூறலாம்.

**விஜயன்**

இந்தியாவின் இதிகாச நூல்கள் என்று இராமாயணமும், மகாபாரதமும் போற்றப்படுகிறது. இவை போன்று பாளி மொழியில் எழுதப்பட்ட ஒரு நூல்தான் மகாவம்சமாகும். இந்த மகாவம்ச நூலினை தங்களின் வேதப்புத்தகம் என்றும், தங்களின் வரலாற்று நூல் என்றும் சிங்களவர் கூறி வருகின்றனர். ஆனால், அதிலே நம்ப முடியாத கட்டுக்கதைகள் பல இருக்கின்றன என்பதே மெய்யாகும்.

இலங்கையில் சிங்கள வம்சத்தை தோற்றுவித்தவனும், இலங்கையின் முதல் சிங்கள மன்னனும் விஜயன்தான் என்று மகாவம்சம் கூறுகிறது. வரலாற்றினைப் பார்க்கிறபோது விஜயன் காலத்தில் பேசப்பட்ட மொழி சிங்களமொழி ஒன்றிருக்கவில்லை.

வட இந்தியாவில் உள்ள வங்காளம், ஒரிசா ஆகிய பகுதிகள் ஒரு காலத்தில் லாலாதேசம் என்று அழைக்கப்பட்டது. இந்த ராஜ்ஜியத்தை ஆண்ட மன்னன் பெயர் சிங்கபாகு. இவன், சிங்கத்துக்கும் ஒரு ராஜகுமாரிக்கும் பிறந்தவனாம்.

இதைத்தான் அண்டப் புழுகு என்று தமிழில் சொல்லுவர். டார்வினின் கூர்ப்புக்கொள்கை தெரியாதவர்கூட இப்படியொரு சம்பவத்தை ஏற்றுக்கொள்ளமாட்டார்.

பிற்காலத்தில் சிங்கபாகுவிற்கு தன் பிறப்பின் ரகசியம் தெரியவர, குகையில் இருந்த தன் தந்தையான சிங்கத்தைக் கண்டுபிடித்து தலையை வெட்டி துண்டாக்கிக் கொன்றானாம்.

ஒரு சிங்கத்தின் ஆயுட்காலம் என்ன? ஒரு மனிதன் கருத்தரித்த காலத்தில் இருந்து அவன் பிறந்து கட்டழுகுக் காளையாக வளரும் காலம் வரைக்கும் ஒரு சிங்கத்தின் ஆயுள் காலம் என்னவாக இருக்க முடியும்? இது ஆய்வுக்குரிய விடயமாகும்.

இந்தச் சிங்கபாகு, சிகாசிவாலி என்ற பெண்ணை மணந்து அவளை பட்டத்து ராணி ஆக்கினானாம். இவர்கள் இருவருக்கும் 16 தடவைகள் இரட்டைக் குழந்தைகள் பிறந்தனவாம்; இந்த 32 குழந்தைகளில் மூத்தவன் விஜயன்; அவனை பட்டத்து இளவரசனாக சிங்கபாகு நியமித்தார்.

ஆனால், விஜயன் மிகக் கொடூரமானவனாகவும், மக்களிடை அட்டூழியங்கள் புரிபவனாகவும் இருந்தான். இவற்றினை மன்னனிடம் சென்று மக்கள் முறையிடுகின்றனர். பல சந்தர்பக்கங்களில் தன் மகனைத் திருத்த முயற்சிக்கிறார், தந்தை சிங்கபாகு. ஆனால் விஜயன் திருந்தவில்லை.

மீண்டும் தன் நண்பர்களுடன் சேர்ந்துகொண்டு மக்களைத் துன்புறுத்தினான். விஜயன் எல்லை மீறிச் செயற்பட்டுக்கொண்டிருந்தான். இதனை மன்னனிடம் மக்கள் மீண்டும் முறையிட்டனர். விஜயனுக்கு மரண தண்டனை விதியுங்கள் என்று வற்புறுத்தினர். இதன் காரணமாக, விஜயனையும், அவன் நண்பர்கள் 700 பேர்களையும் நாடு கடத்தினான், சிங்கபாகு மன்னன்.

இவர்கள் யாவரையும் மூன்று கப்பல்களில் ஏற்றி, "எங்காவது போய் பிழைத்துக் கொள்ளுங்கள். அங்கேயாவது திருந்தி வாழுங்கள்" என்று புத்திமதி கூறி அனுப்பி வைத்தான். இந்த மூன்று கப்பல்களும் இலங்கையை வந்தடைந்தன.

## அடைக்கலம் கொடுத்த அழகி

விஜயன் கப்பலை விட்டு இறங்கி, இலங்கைத் தீவில் காலடி வைத்தான். இது கி.மு. 543 இல் நடந்த ஒரு சம்பவமாகும்.

விஜயன் வந்திறங்கிய இடம் அழகிய இயற்கைக் காட்சியாய் காணப்பட்டது. அங்கு ஒரு மரத்தடியில் குவேனி என்ற பெண் அமர்ந்திருந்தாள். அவள் ராட்சச குலத்தைச் சேர்ந்தவள். இலங்கையை ஆண்ட ராவணன் ராட்சதன் என்று கூறப்பட்டதுபோல, குவேனியையும் ராட்சத குலமாது என்று வர்ணிக்கிறது, மகாவம்சம்.

குவேனி என்ற சொல், கவினி என்ற தமிழ்ச்சொல்லின் திரிபு ஆகும். கவினி என்றால் பேரழகு படைத்தவள் என்று பொருளாகும்.

இந்தக் குவேனியை விஜயன் சந்தித்து அடைக்கலம் கோருகிறான். அவள் அவனுக்கு அடைக்கலம் அளிக்கிறாள்.

நாளடைவில் விஜயனுக்கும் குவேனிக்குமிடையே காதல் ஏற்படுகிறது. ஒருவருக்கொருவர் காதலித்தனர். இருவரும் திருமணம் செய்தனர். இவர்களுக்கு ஒரு மகனும், ஒரு மகளும் பிறந்தனர்.

**தபால் தலை**

1956 இல் விஜயனின் வருகை என்ற தலைப்புடன் சிறப்புத் தபால் தலை ஒன்றினை இலங்கை அரசு வெளியிட்டது.

குவேனி ஒரு மரத்தடியில் அமர்ந்திருப்பது போலவும், கப்பலில் வந்த விஜயன் அவளிடம் அடைக்கலம் கோருவது போலவும் அந்த தபால் தலையின் உள்ளடக்கம் அமைந்திருந்தது.

இத்தபால் தலையை பார்த்த சிங்கள தலைவர்கள், அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். விஜயன் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு வந்தவன் என்ற கருத்து ஏற்கத் தக்கது அல்ல; தவிரவும், விஜயன் வந்தபோதே இங்கு குவேனி என்ற தமிழ்ப்பெண் இருந்திருக்கிறாள் என்று கூறினால், இலங்கையின் பூர்வகுடிகள் தமிழர்கள் என்பதை நாமே ஒப்புக்கொண்டது போலாகிவிடும்.

எனவே, இந்தத் தபால் தலையை மீளப்பெறவேண்டும் என்று கூறி போர் செய்தார்கள். இதன் காரணமாக, இந்த தபால் தலையை இலங்கை அரசு மீளப்பெற்றுக்கொண்டது.

இப்படியாகத்தான் தமிழுக்கும், தமிழருக்குமான அடையாளங்கள் யாவும் மறைக்கப்பட்டு வந்திருக்கின்றன.

ஆனாலும், இந்த தபால் தலை உலகம் முழுவதும் பரவி விட்டது என்பதே உண்மையான விடயமாகும்.

## பாண்டிய இளவரசி

விஜயனுடன் இலங்கை சென்ற அவனுடைய 700 நண்பர்களும் பல நகரங்களையும், கிராமங்களையும் உருவாக்கினர். அந்தப் பகுதிகளை உள்ளடக்கிய ராஜ்ஜியத்துக்கு மன்னன் ஆகும்படி, விஜயனை கேட்டுக் கொண்டனர். ஆனால், விஜயன் மறுத்து விட்டான்.

"ராஜ குடும்பத்தைச் சேர்ந்த ஒரு இளவரசியை நான் மணந்தால்தான் சிம்மாசனம் ஏறமுடியும்" என்று கூறினான்.

இதன் காரணமாக, விஜயனின் நண்பர்கள் மதுரைக்குச் செல்கின்றனர். மதுரை மன்னனுக்கு முத்துகள், தங்க ஆபரணங்கள் முதலியவற்றை பரிசாக வழங்கி, தங்கள் மன்னனான விஜயனுக்கு இளவரசியை மணமுடித்து வைக்குமாறு கேட்டனர்.

இதற்கு பாண்டிய மன்னன் சம்மதிக்கிறான். பாண்டிய இளவரசியுடன், விஜயனின் 700 நண்பர்களுக்கும் 700 பெண்களைத் தேர்வு செய்து இலங்கைக்கு அனுப்பி வைக்கிறான். பாண்டிய இளவரசி தன்னை மணப்பதற்கு இசைந்து இலங்கைக்கு வந்து விட்டதை அறிந்த விஜயன் மிகவும் மகிழ்ச்சி அடைந்தான். அந்தநேரம் குவேனியை அழைத்து இப்படிச் சொன்னான்.

"நான் பாண்டிய ராஜகுமாரியை மணக்கப்போகிறேன். என்னுடைய இரண்டு குழந்தைகளையும் என்னிடம் ஒப்படைத்து விட்டு, இங்கிருந்து போய்விடு"

இதனால் வேதனை அடைந்த குவேனி, குழந்தைகளை அழைத்துக்கொண்டு லங்காபுரா என்ற இடத்துக்கு போய் விடுகிறாள். இன்று இவர்களுடைய வம்சாவழியினர், இலங்கையின் பழங்குடியினராக உள்ள வேடுவர் என்று சொல்லப்படுகிறது.

பாண்டிய ராஜகுமாரியை மணந்து கொண்ட விஜயன், அவளுடன் வந்த 700 பெண்களுக்கும் அமைச்சர்களாக உள்ள தன் நண்பர்களை அவரவர் தகுதிக்கு ஏற்ப மணம் முடித்து வைக்கிறான். முன்பு கொடியவனாகவும், முரடனாகவும் இருந்த விஜயன் நல்லவனாக திருந்தி 38 ஆண்டு காலம் தர்மம் தவறாமல் இலங்கையை ஆண்டான் என்று மகாவம்சம் கூறுகிறது.

## சிங்களமொழியின் தோற்றம்

வங்கதேசத்து இளவரசனான விஜயனின் தாய்மொழி வங்கமொழி ஆகும். இவன் இலங்கை வந்தடைந்தபோது இலங்கைத் தீவின் பல தேசங்களிலும் தமிழர்களே வாழ்ந்து வந்தனர்.

இவன் சார்ந்த மொழியினர் இங்கே குடியமர்த்தப்பட்டனர் என்பதும், அவர்கள் இங்குள்ள தமிழர்களைத் திருமணம் புரிந்தனர் என்பதும் விஜயனுடைய ஆட்சிக்குத் திருப்புமுனையாக அமைந்தது எனலாம்.

கி.மு.269 தொடக்கம் கி.மு.227 வரையான காலப்பகுதி அசோகப் பேரரசுக் காலமாகும். இக்காலத்திலே தமிழகத்திலும் ஈழத்திலும் என பிற சமயத்தவர்கள் புத்த சமயத்திற்கு மாற்றப்பட்டுக் கொண்டிருந்தனர். இதற்கு அக்கால ஆட்சியாளர்களும் ஒத்துழைப்பு நல்கினர்.

அசோகப் பேரரசின் சார்பில் புத்த பிக்குவான மகிந்தர் ஈழத்திற்கு வந்தார். அனுராதபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஈழத்தீவினை ஆட்சி செய்து வந்த திசைய மன்னனைப் (தீச மன்னன்) புத்த சமயத்திற்கு மாற்றியவர் இந்த மகிந்தரே ஆவார்.

தீச மன்னனைத் தொடர்ந்து மக்களும் புத்த சமயத்திற்கு மாறினர். இதற்குப் பிறகுதான் தீச மன்னனுக்கு "தேவநம்பிய" என்ற பட்டம் வழங்கப்பட்டது. தீச மன்னன் தேவநம்பிய தீசன் என்று அழைக்கப்படலானான்.

புத்த சமய பீடங்கள் பல பாளிமொழியில் இருந்தன. இக்காலத்திலே பிராகிருத மொழியும் (சமஸ்கிருத மொழி) பாளி மொழியும் ஈழத்திலே பயன்பாட்டு மொழியாக உலா வரத் தொடங்கின.

இம்மொழிகளோடு ஈழமண்ணின் மொழியாக இருந்த தமிழ்மொழி கலந்து உருண்டு புரளத் தொடங்கியது. இப்படியாக வெவ்வேறு மொழிகள் ஒன்றுடன் ஒன்றாய் இணைந்த போதுதான் வட்டார வழக்குமொழி ஒன்று தோற்றம் பெறுகின்றது. அந்த வட்டார வழக்கு மொழியே பிற்காலத்தில் சிங்களமொழி என அழைக்கப்பட்டது.

ஆனால், இன்று பழைய சிங்களம் என்பது கி.பி.7 ஆம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி.12 ஆம் நூற்றாண்டு வரை பாவனையில் இருந்த சிங்களமும், புதிய சிங்களம் என்பது கி.பி12 ஆம் நூற்றாண்டு முதல் தற்போது வரையில் இருக்கின்ற சிங்களமொழியும் ஆகும்.

தற்போதைய சிங்களமொழி என்பது தமிழ், வங்காளம், பாளி, சமஸ்கிருதம், டச், ஆங்கிலம் மற்றும் இந்திய மொழிகள் அனைத்தும் சேர்ந்த ஒரு கூட்டுமொழி ஆகும். அதாவது, சிங்களமொழி ஒரு தனித்துவமான மொழி கிடையாது.

**சேதுத்திடல் தொடர்**

இராமர் பாலம் அமைத்தது தொடர்பான கதையைச் சொல்வது சேதுபுராணம் என்ற பழைய நூலாகும்.

நூற்றாண்டு பழமை வாய்ந்த அப்புராணத்தைத் தேடிக் கண்டுபிடித்து அதை ஆய்வு செய்யும் போதுதான் சேது சமுத்திரம் பற்றிய சரியான உண்மைகளை எம்மால் கண்டறிய முடியும்.

இராமர்தான் சேது அணையைக் கட்டினார் என்று கூறும் அப்புராணம், இராமரே தனது கை வில்லினால் அதே சேது அணையை தகர்த்து அழித்தார் என்ற செய்தியையும் அறிவிக்கிறது. அதாவது, கடலுக்கு மேலே (நீருக்கு மேலே) மிதவைக் கல்லால் இராமர் ஒரு பாலம் அமைத்தார் என்பதை சேதுபுராணம் கூறுகிறது.

இராவணவதம் முடிந்து, அப்பாலத்தைக் கடந்து மீண்டும் தனுஷ்கோடிப்பகுதிக்கு இராமர் கூட்டம் வந்து சேர்கிறது. அப்போது விபீஷணன் இராமனைப் பார்த்து இப்படிக் கூறுகிறான்.

"இலங்கைக்குச் சென்று வர நீங்கள் அமைத்த இப்பாலத்தை இப்படியே விட்டுச்சென்றால், இலங்கையில் உள்ள கொடியவர்கள் இப்பாலத்தின் வழியே வந்து இங்குள்ள பல பகுதிகளுக்கும் சென்று விடுவார்கள்; அவர்கள் இங்கே வந்தால் அக்கிரமம், கொடுமைகள், அழிவுகள் என்று பலதும் செய்வார்கள். எனவே, நீங்கள் அமைத்த இப்பாலத்தை நீங்களே தகர்த்து அழித்து விடுங்கள்" என்று வேண்டிக் கொண்டானாம். அதைக்கேட்ட இராமர் அவ்வாறே அப்பாலத்தை தகர்த்து அழித்துவிட்டார் என்று கூறுகிறது சேதுபுராணம்.

சேதுத்திடல் தொடர் என்பது மன்னார்த் தீவையும் (தலை மன்னார்) இராமேஸ்வரத்தையும் பாக்கு நீரிணை ஊடாகப் பிரிக்கின்ற ஒரு பாலமாகும். இராமேஸ்வரத்திலிருந்து தலை மன்னார் வரையான மேட்டுநிலத் தொடர் பகுதியே சேதுத் திடல் தொடராகும். இது கிட்டத்தட்ட 40 கிலோ மீற்றர்த் தூரமாகும்.

## பாரதியின் பாடல்

இனி பாரதியின் பாடலுக்கு வருவோம்.

*சிந்து நதியின்மிசை நிலவினி லே*
*சேர நன்னாட்டிளம் பெண்களுட னே*
*சுந்தரத் தெலுங்கினிற் பாட்டிசைத்துத்*
*தோணிக ளோட்டிவிளை யாடிவரு வோம்.*

இந்தப் பாடலைக் கேட்டு ரசிக்காதவர்கள் யாருமே இருக்க முடியாது. அந்தளவுக்கு இப்பாடல் கேட்கும் ஒவ்வொருவரும் இனிமை பெற்று சுகந்தித்திருப்பர். இப்பாடல் ஒரு தனிப்பாடல் அல்ல; பாரத தேசம் என்று பாரதியார் பாடிய பாடலின் ஒரு பகுதியே ஆகும்.

அதாவது,

*பாரத தேசமென்று பெயர்சொல்லுவார் - மிடிப்*
*பயங்கொல்லுவார் துயர்ப் பகைவெல்லுவார்*

என்ற பல்லவியுடன் தொடங்கும் பாடலின் ஐந்தாவது சரணப் பகுதியாக “சிந்து நதியின்மிசை நிலவினிலே” எனத் தொடங்கும் சரணம் அமைந்து வருகிறது.

பாரத தேசம் எனும் இப்பாடலிலே மொத்தம் பதின்மூன்று சரணங்கள் காணப்படுகின்றன. அச்சரணத்தின் ஆறாவது மற்றும் இரண்டாவது சரணப் பகுதிகளே மேற்படி பாடலின் முதலாவது மூன்றாவது சரணங்களாக அமைத்து ஒரு திரைப்படத்திற்குப் பாடலாக்கியிருக்கின்றனர்.

இதில் நான் சொல்ல வருகின்ற விடயம் யாதெனில், “சிங்களத் தீவினிற்கோர் பாலம் அமைப்போம், சேதுவை மேடுறுத்தி வீதி சமைப்போம்“ என்ற வரிகளில் “சிங்களத் தீவினிற்கோர்” என்ற வரிகள் பாரதியார் எழுதிய வரிகளாக நிச்சயம் இருக்கமுடியாது என்பதாகும்.

ஏனெனில், சிங்களவர்களின் ஜாதகக் கதைகளில் தமிழர்கள் பற்றியும் தமிழர்களின் நாடு பற்றியும் (தெமல ரட்ட = தமிழ் நாடு) குறிப்புகள் நிறையவே இருந்துள்ளன.

உதாரணமாக தெமல, ரட்ட, தெமல ரட்ட போன்ற சொற்களைக் கூறலாம்.

ஆனால் சிங்கள இனம் பற்றியோ அல்லது சிங்களமொழி பற்றியோ மகாவம்சம் எழுதுவதற்கு முன்பும், பின்பும் என சில நூற்றாண்டுகளுக்குக் குறிப்புகள் எதுவும் இருக்கவில்லை.

சிஹல என்ற சொல் மாத்திரமே முதல் இரண்டு அத்தியாயங்களிலும் ஒரு தடவை மட்டும் காணப்பட, சிங்கள, ஹேல என்ற எந்தச் சொல்லும் மகாவம்சத்தில் காணப்படவில்லை. சிஹல, ஹேல இவை சிங்கள மொழிக்கான முக்கிய சொற்களாகும்.

இப்படியாக இலங்கை வரலாற்றின் அடிப்படையில் சிங்களமொழியோ, சிங்கள இனமோ வாழ்ந்ததற்கான எந்தவொரு சான்றாதாரங்களும் இல்லாத ஒரு தன்மையில் இலங்கைத் தீவினை சிங்களத்தீவு என அழைப்பது தவறான ஒரு விடயமாகும்.

இப்படித் தவறான ஒரு விடயத்தை அல்லது தவறான ஒரு சொல் பிரயோகத்தை மகாகவி பாரதியும் சொல்லி இருக்கமாட்டார் என்பதே எனது வாதமாகும். இதற்காக, பாரதியின் மூலபாடலை எடுத்து நோக்கும் போதுதான் அதன் உண்மைநிலை தெரிய வரும்.

பாரததேசம் எனும் பாடலில் இரண்டாவது சரணமானது "சிங்ககத் தீவினுக்கோர் பாலம் அமைப்போம்" எனும் அடியானது காலத்திற்குக் காலம் பதிவேற்றம் செய்து வருகின்ற போது அதன் ஒரு மருவலாகவே "சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைப்போம்" என அமைந்திருக்க முடியும் என்பது எனது கருத்தாகும்.

ஏனென்றால், சிங்கைநகர் என்பது ஒருகாலத்தில் யாழ்ப்பாண இராச்சியத்தின் தலைநகராக இருந்திருக்கிறது. அதாவது, யாழ்ப்பாண இராச்சியம் என்பது யாழ்ப்பாணம்; மன்னார்; வவுனியா; முல்லைத்தீவு; கிளிநொச்சி ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கிய பெரும் தேசமாகும்.

யாழ்ப்பாணத்தை ஆண்ட ஆரியச் சக்கரவர்த்திகள் வம்சத்தின் முதல் அரசனின் பெயர் சிங்கையாரியன் ஆவான். அவனைத் தொடர்ந்து கிபி 1478 வரை அரசாண்ட கனகசூரிய சிங்கையாரியன் வரையாக எல்லா அரசர்களும் சிங்கையாரியன் என்னும் பட்டத்தைக் கொண்டிருந்ததாகக் கூறப்படுகிறது.

அதன் பின்னர் வந்த இரண்டு அரசர்கள் இப்பட்டத்தைச் சுருக்கிச் சிங்கைப் பரராசசேகரன், சிங்கைச் செகராசசேகரன் என்னும் பெயர்களுடன் ஆட்சி புரிந்ததாகவும் யாழ்ப்பாண வைபவமாலை கூறுகிறது. இவர்களின் பெயர்களோடு முன்னொட்டி வந்த இப்பட்டப் பெயரே சிங்கைநகர் என்னும் ஒரு நகர் இருந்தது என்ற கருத்துக்கு அடிப்படை ஆகும்.

சிங்கைநகர் என்னும் நகரம் எது என்பது குறித்து யாழ்ப்பாண வரலாறு தொடர்பாக ஆராய்ந்த அறிஞரிடையே ஒருமித்த கருத்து இருக்கவில்லை. இருக்கக்கூடிய மிகக் குறைவான வரலாற்று மூலங்களைச் சான்றாகக்கொண்டு பல்வேறு கருத்துகள் முன்வைக்கப்பட்டன. அவற்றுள் முக்கியமானவை பின்வருமாறு.

சிங்கைநகர் என்பது நல்லூர் என்ற கருத்தினையே ஆராட்சியாளர்கள் பலரும் முன்மொழிந்திருக்கின்றனர். அதேநேரம், யாழ்ப்பாணக் குடாநாட்டிற்குத் தெற்கே தலைநிலத்தில் (தலை மன்னார்) இருந்தது என்ற கருத்தினை இன்னொரு சாரார் முன்மொழிந்திருக்கின்றனர்.

ஆராட்சியளர்கள் வேறுசிலர் யாழ்ப்பாணத்தின் கிழக்குப் பக்கமாக உள்ள வல்லிபுரம் எனும் பிரதேசத்தைச் சிங்கை நகர் எனச் சுட்டிக் காட்டுகின்றனர்.

எது எப்படியோ, யாழ்ப்பாண இராட்சயகாரர்களின் தலைநகராக சிங்கைநகர் இருந்தது என்பதுதான் உண்மை ஆகும்.

சிங்கை நகர் என்பது சிங்ககம் என்பதே ஆகும். அகம் என்பற்கு உள்ளம்; காதல்; வீடு; நகர் எனப் பல்வேறு பொருள் உண்டு.

அந்த வகையில் சிங்கை நகருக்குப் பாலம் அமைப்போம் என்ற தோரணையிலேதான் பாரதியும் பாடல் பாடியிருக்க முடியும். அதாவது "சிங்ககத் தீவினிற்கோர் பாலம் அமைபோம்" என்றுதான் பாரதி பாடியிருப்பார். கால நீட்சியில் "சிங்களத் தீவனிற்கோர் பாலம் அமைப்போம்" என நெகிழ்ச்சி அடைந்து வந்திருக்கக்கூடும் என நான் எண்ணுகிறேன்.

"சேதுவை மேடுறுத்தி வீதி சமைப்போம்" என்பது சேதுத் திடல் தொடரையே அது குறித்து நிற்கிறது. சேதுத்திடல் தொடர் என்பது இராமேசுவரத்திற்கும் தலை மன்னாருக்கும் இடையிலான மேட்டுநிலப் பாலமாகும்.

இப்படிப் பார்க்கிறபோது சிங்கை நகர் என்பது யாழ்ப்பாணக் குடாநாட்டிற்குத் தெற்கே தலைநிலத்தில்தான் (தலை மன்னார்) இருக்கிறது என்ற உண்மையும் தெரியவருகிறது. ஏனென்றால், தலை மன்னார் என்பது யாழ்பாணத்திற்குத் தெற்கே அமைந்த ஒரு பிரதேசமாகும். இதுவே சிங்கைநகர் என்றும் அதுவே யாழ்ப்பாண இராச்சியத்தின் தலைநகர் என்றும் விளங்கியிருக்க வேண்டும்.

ஆகவேதான் பாரதி சரியாகத்தான் பாடியிருப்பான்; நாம்தான் அதனை மாற்றி அமைத்துவிட்டோமோ...? என்று ஐயம் கொள்ள வைக்கிறது. இந்த ஐயத்திற்கான சரியான ஆதாரத்தினை தமிழ் ஆர்வலர்களிடமே விட்டு விடுகிறேன்.

ஆதலால், இதுபற்றிய மூலபாடல் எனக்குமட்டுமல்ல தமிழையும், தமிழரையும் நேசிக்கின்ற யாருக்குமே தெரிந்தாக வேண்டும் என எண்ணுகிறேன்.

பாரதியின் பாரத தேசம் எனும் இரண்டாவது சரணமானது "சிங்ககக் தீவினிற்கோர்" எனும் பாடலடியின் மூலப்பிரதியைத் தருபவர்கள் உங்களில் யாராக இருக்கப்போகிறீர்கள்? அத்தகைய தமிழ் வாசகர்களுக்காக பாரததேசம் எனும் முழுப்பாடலையும் தந்துவிடுகிறேன்.

**பாரத தேசம்**

**பல்லவி**

*பாரத தேசமென்று பெயர்சொல்லு வார் - மிடிப்*
*பயங்கொல்லு வார்துயர்ப் பகைவெல்லு வார்.*

**சரணங்கள்**

1

*வெள்ளிப் பனிமலையின் மீதுலவு வோம் - அடி*
*மேலைக் கடல்முழுதும் கப்பல் விடுவோம்*
*பள்ளித் தலமனைத்தும் கோயில் செய்கு வோம், எங்கள்*
*பாரத தேசமென்று தோள்கொட்டுவோம்.* 2

*சிங்கக(ள)த் தீவினுக்கோர் பாலம் அமைப்போம்,*
*சேதுவை மேடுறுத்தி வீதி சமைப்போம்*
*வங்கத்தில் ஓடிவரும் நீரின் மிகையால்*
*மையத்து நாடுகளில் பயிர்செய்குவோம்.* 3

*வெட்டுக் கனிகள் செய்து தங்கம் முதலாம்*
*வேறு பலபொருளும் குடைந் தெடுப்போம்,*
*எட்டுத் திசைகளிலுஞ் சென்றிவை விற்றே*
*எண்ணும் பொருளனைத்தும் கொண்டு வருவோம்.* 4

முத்துக் குளிப்பதொரு தென் கடலிலே,
மொய்த்து வணிகர்பல நாட்டினர்வந்தே,
நத்தி நமக்கினிய பொருள் கொணர்ந்தே
நம்மருள் வேண்டுவது மேற்க ரையிலே. 5

சிந்து நதியின்மிசை நிலவினி லே
சேர நன்னாட்டிளம் பெண்களுட னே
சுந்தரத் தெலுங்கினிற் பாட்டிசைத்துத்
தோணிக ளோட்டிவிளை யாடிவரு வோம். 6

கங்கை நதிப்புறத்துக் கோதுமைப் பண்டம்
காவிரி வெற்றிலைக்கு மாறுகொள்ளு வோம்
சிங்க மராட்டியர்தம் கவிதை கொண்டு
சேரத்துத் தந்தங்கள் பரிசளிப்போம். 7

காசி நகர்ப்புலவர் பேசும் உரை தான்
காஞ்சியில் கேட்பதற்கோர் கருவிசெய் வோம்
ராசபுத் தானத்து வீரர் தமக்கு
நல்லியற் கன்னடத்துத் தங்கம் அளிப்போம். 8

பட்டினில் ஆடையும் பஞ்சினில் உடையும்
பண்ணி மலைகளென வீதி குவிப்போம்
கட்டித் திரவியங்கள் கொண்டுவரு வார்
காசினி வணிகருக்கு அவை கொடுப்போம் 9

ஆயுதம் செய் வோம் நல்ல காகிதம் செய்வோம்
ஆலைகள் வைப்போம் கல்விச் சாலைகள் வைப்போம்
ஓயுதல்செய் யோம்தலை சாயுதல் செய்யோம்
உண்மைகள்சொல்வோம்பல வண்மைகள் செய்வோம். 10

குடைகள்செய் வோம் உழு படைகள் செய் வோம்
கோணிகள்செய் வோம் இரும் பாணிகள் செய்வோம்
நடையும் பறப்புமுணர் வண்டிகள் செய்வோம்
ஞாலம் நடுங்கவரும் கப்பல்கள் செய்வோம் *11*

மந்திரம்கற் போம்வினைத் தந்திரம்கற் போம்
வானையளப் போம்கடல் மீனையளப்போம்
சந்திரமண் டலத்தியல் கண்டுதெளி வோம்
சந்திதெருப் பெருக்கும் சாத்திரம் கற்போம். *12*

காவியம் செய்வோம் நல்ல காடு வளர்ப்போம்
கலைவளர்ப் போம் கொல்ல ருலைவளர்ப் போம்
ஓவியம்செய் வோம் நல்லஊசிகள் செய் வோம்
உலகத் தொழிலனைத்து முவந்து செய்வோம். *13*

சாதி இரண்டொழிய வேறில்லை யென்றே
தமிழ்மகள் சொல்லியசொல் அமிழ்த மென்போம்
நீதிநெறி யினின்று பிறர்க்கு தவும்
நேர்மையர் மேலவர், கீழவர் மற்றோர். *14*

# 03. 'கள்' பெற்ற சிறுவாழ்வு

'கள்' என்ற விகுதி முதலில் அஃறிணை பன்மையைக் குறிக்க மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. பிற்காலத்தில் அது மெல்ல மெல்ல மற்றைய சொற்களின் பன்மையையும் குறிக்கத் தொடங்கியது.

'அர்' என்பதும் பன்மை விகுதியாகக் கருதப்படுவதால் 'கள' விகுதி 'அர்' உடன் ஒட்டும்போது 'அர்கள்' என்று இரட்டைப் பன்மையாக வரத்தொடங்கியிருக்கிறது.

உதாரணம்: தமிழர்கள், காதலர்கள், மறவர்கள், அவர்கள், தோழர்கள், நண்பர்கள்.

இப்படியாக 'கள்' என்ற சொல்லு பயன்பாட்டு முறையிலே அது பெற்ற பெரும் சிறப்பினை 'கள் பெற்ற பெருவாழ்வு' எனும் கட்டுரை வாயிலாக முனைவர் மு.வரதராஜன் தெளிவு படுத்தியிருந்தார்.

'கள்' என்ற விகுதி சில சொற்களோடு சேரும்போது இடையில் தோன்றுகின்ற 'க்' ஆனது புணர்ச்சிப் பொருளின் தன்மையை சில இடங்களில் மாற்றிவிடுகிறது.

பட்டதாரி ஆசிரியர்கள் பலரும், ஈழத்திலே இருந்து வெளிவருகின்ற அனேகமான நாளிதழ்கள், மற்றும் கவிஞர்கள், எழுத்தாளர்கள் என்று சிலரும் இத்தகைய பண்பிலேதான் எழுதி வருகின்றனர். அதற்கான முழு ஆதாரம் என்னிடம் உண்டு.

'கள்' என்பதைச் சரியாகப் புணர்த்திக் கொள்வதில் சிறுமை அடைந்து விட்டோமா? அல்லது 'கள்' என்ற சொல் சிறுமை அடைந்து விட்டதோ? என்பதை இக்கட்டுரை முடிவில் யாரும் உணர்ந்து கொள்ளலாம்.

குற்றியலுகரம் என்றால் என்ன? என்பதைப் பார்ப்போம்.

சில சொற்கள் 'உ' என்ற ஓசையில் முடிகின்றன. இப்படி ஒலிக்கின்றபோது எது தன் இயல்பு நிலையிலிருந்து குறைந்த ஒலி அளவில் ஒலிக்கிறதோ அது குற்றியலுகரம் எனப்படும்.

அதாவது க், ச், ட், த், ப், ற் எனும் வல்லின மெய்களோடு பின்னொட்டாக 'உகரம்' ஒட்டி வரும்போது அவை முறையே கு, சு, டு, து, பு, று ஆகிவருகின்றன. இவற்றிற்கு முன்னொட்டாக வந்து ஒட்டுகின்ற எழுத்தினை அடிப்படையாகக் கொண்டு அவை ஆறு வகையாக்கப்பட்டுள்ளன.

1. வன்றொடர் குற்றியலுகம் : பாக்கு, பேச்சு, வெட்டு, சொத்து, காப்பு, மாற்று.
2. மென்றொடர் குற்றியலுகரம் : உறங்கு, பஞ்சு, சொண்டு, பந்து, பாம்பு, மன்று.
3. இடைத்தொடர் குற்றியலுகரம் : செய்து, மார்பு, சால்பு, கவ்வு.
4. உயிர்த்தொடர் குற்றியலுகரம் : மிளகு, உலாவு, வயிறு, மாரீசு, குருசு, மரூவு.
5. நெடில்தொடர் குற்றியலுகரம் : காது(க்+ஆ+ து), ஈடு, ஊது, ஏறு, ஓடு.
6. ஆய்தத்தொடர் குற்றியலுகரம் : எஃகு, அஃது.

சொல் புணர்ச்சயின்போது மெய்யெழுத்துகளில் ஏதாவது ஒன்றினை அடுத்து 'கள்' விகுதி வரும்போது அதனை எப்படி ஞாபகத்தில் வைத்திருப்பது என்பது பற்றிப் பார்ப்போம்.

- நெடில் எழுத்தில் ஆரம்பிக்கும் இரண்டெழுத்துக் குற்றியலுகரச் சொல்லினை அடுத்து 'கள்'விகுதி ஒட்டும் போது மெய்யெழுத்து மிகையாக ஒலிக்காது.

உதாரணம் : ஆடு, மாடு, கூடு, மாது, காது, பாடு, சாது, வீடு, ஓடு, தூசு, நாகு, ஆறு, தீவு போன்றவை முறையே ஆடுகள், மாடுகள், கூடுகள், மாதுகள், காதுகள், பாடுகள், சாதுகள், வீடுகள், ஓடுகள், தூசுகள், நாகுகள், ஆறுகள், தீவுகள் என்று புணர்ந்து வரும்.

மாறாக ஆடுக்கள், மாடுக்கள், கூடுக்கள், காதுக்கள், பாடுக்கள், சாதுக்கள், வீடுக்கள், ஓடுக்கள், தூசுக்கள், நாகுக்கள், ஆறுக்கள், தீவுக்கள் என எழுதுவது தவறானதாகும்.

- குறில் எழுத்தில் ஆரம்பிக்கும் இரண்டெழுத்துக் குற்றியலுகரச் சொல்லினை அடுத்து “கள்“ விகுதி ஒட்டும்போது மெய்யெழுத்து மிகையாக ஒலிக்கும்.

உதாரணம்: அணு, பசு, மடு, கணு, பரு, தெரு, உரு, உடு போன்றவை அணுக்கள், பசுக்கள், மடுக்கள், கணுக்கள், பருக்கள், தெருக்கள், உருக்கள், உடுக்கள் எனப் புணர்ந்து வரும்.

- குறில் எழுத்தில் ஆரம்பிக்கும் மூன்றெழுத்துக் குற்றியலுகரச் சொல்லினை அடுத்து 'கள்' விகுதி ஒட்டும்போது மெய்யெழுத்து மிகையாகாது.

உதாரணம்: வரவு, செலவு, உறவு, ஆய்வு, மிளகு, சுளகு, வரகு, கொலுசு, மிராசு, தினுசு போன்றவை முறையே வரவுகள், செலவுகள், உறவுகள், ஆய்வுகள், மிளகுகள், சுளகுகள், கொலுசுகள், மிராசுகள், தினுசுகள் எனப் புணர்ந்து வரும்.

- க், ச், ட், த், ப், ற் போன்ற வல்லின மெய்கள் அதன் உகர எழுத்து ஒட்டி வந்த சொல்லோடு 'கள்' விகுதி ஒட்டும் போது மெய்யெழுத்து மிகையாகாது.

உதாரணம் : பாக்கு, வாக்கு, நாக்கு, பொச்சு, வாழ்த்து, எழுத்து, பாராட்டு, உறுப்பு, தோப்பு, காப்பு, நாற்று, கீற்று, கூற்று, முத்து, சொத்து, இனிப்பு, அமைப்பு, பிரேரிப்பு, படைப்பு போன்றவை முறையே பாக்குகள், வாக்குகள், நாக்குகள், பொச்சுகள், வாழ்த்துகள், எழுத்துகள், பாராட்டுகள், உறுப்புகள், தோப்புகள், காப்புகள், நாற்றுகள், கீற்றுகள், கூற்றுகள், முத்துகள், சொத்துகள், இனிப்புகள், அமைப்புகள், பிரேரிப்புகள், படைப்புகள் என்றுதான் புணர்ந்து வரும்.

மாறாக பாக்குக்கள், வாக்குக்கள், நாக்குக்கள், பொச்சுக்கள், வாழ்த்துக்கள், எழுத்துக்கள், பாராட்டுக்கள், தோப்புக்கள், காப்புக்கள், நாற்றுக்கள், கீற்றுக்கள், கூற்றுக்கள், முத்துக்கள், சொத்துக்கள், இனிப்புக்கள், அமைப்புகள், பிரேரிப்புகள், படைப்புகள் என்று எழுதும்போது பொருளின் தன்மை மாறி வருவதை அவதானிக்கலாம்.

'தோப்புக்கள்' என்று சொல்லும்போது தோப்பிலிருந்து பெறப்பட்ட ஒருவகைக் 'கள்' என்று அது பொருள் விளக்கம் பெறுவதை அவதானிக்கலாம்.

"இன்று என் பிள்ளைகளுக்கு 'இனிப்புகள்' நிறைய வாங்கி வந்திருக்கிறேன்" என்பதை "இன்று என் பிள்ளைகளுக்கு 'இனிப்புக்கள்' நிறைய வாங்கி வந்திருக்கின்றேன்" என்று சொல்கின்றபோது பொருள் அர்த்தம் மாறித் தெரிவதை அவதானிக்கலாம்.

இவை போலவே இதனோடு சொல்லப்பட்ட ஏனைய சொற்களும் பொருள் நோக்கிப் பார்க்கப்படுகிறது.

- நெடில் தனி எழுத்துடன் 'கள்' விகுதி ஒட்டும்போது மெய்யெழுத்து மிகையாக ஒலிக்கும்.

உதாரணம் : பாக்கள், ஈக்கள், மாக்கள், பூக்கள்.

'பூக்கள்' என்பது பூக்களின் கூட்டத்தினைக் குறிக்கிறது. அல்லது பூக்களில் இருந்து வடிகின்ற கள்ளாகிய தேனினையும் குறிக்கிறது. இரு பொருள் பெற்றுவருவதை அவதானிக்கலாம்.

'கள்' என்பது பன்மையை குறிக்கும் ஒரு விகுதியாக மட்டும் நோக்கப்படவில்லை. பனை, தென்னை, வேம்பு இவற்றிலிருந்து பெறப்படும் வடிசாற்றினையும் 'கள்' என்றுதான் சொல்கிறார்கள். அப்படிப் பார்க்கிறபோது 'கள்' என்பது தனிச்சொல்லாகவும் நோக்கப்படுவதை அவதானிக்கலாம்.

இதிலே 'கள்' என்பது தனிச்சொல்லாக அன்றி பன்மையினைக் குறிக்கின்ற விகுதியாகவே நோக்க வேண்டும். ஒரு சொல் பல பொருள் என தமிழில் நிறைய உள்ளன. அதுபோலத்தான் பூக்கள் என்ற சொல்லும் அமைந்து வருகிறது.

1. 'ஐ' இல் முடிகின்ற ஓரெழுத்துச்சொற்கள் 'கள்' விகுதியுடன் ஒட்டும் போது மெய்யெழுத்து மிகையாக ஒலிக்காது.

உதாரணம் : பைகள், கைகள், மைகள்.

2. 'ய், ண், ர், ன், ல்' மெய்யெழுத்துகளுடன் குறில் வந்தாலும் அல்லது நெடில் வந்தாலும் அவை மிகயாக ஒலிக்காது.

உதாரணம் : பொய்கள், காய்கள், பெண்கள், ஆண்கள், சுவர்கள், தேர்கள், கடன்கள், மான்கள், மயில்கள், வால்கள், கடல்கள், பதில்கள்.

**'கள்' தரும் இன்னொரு மயக்கம்:**

(அ) நாட்கள், ஆட்கள் என்று உச்சரிப்பதையோ அல்லது எழுதுவதையோ தவறு என்று சிலர் கூறுகின்றனர். அவை முறையே நாள்கள், ஆள்கள் என்றுதான் எழுதப்படவேண்டும். ஏனென்றால், கோள்கள்; தோள்கள்; கால்கள்; நூல்கள் என்று தான் சொல்கிறோம். அப்படிப் பார்க்கின்றபோது நாள்கள், ஆள்கள் என்று உச்சரிப்பதே சரியாகும்.

(ஆ) அதே சிலர், சொற்கள்; மரங்கள்; கற்கள்; முறங்கள்; பட்டாங்கள்; தென்னங்கள்; முட்கள்; புற்கள் என எழுதுவது சரி என ஒப்புக்கொள்கின்றனர்.

மேலே சொல்லப்பட்ட (அ), (ஆ) என்பவற்றிலிருந்து சில முடிவுக்கு வரமுடிகிறது.

- ள், ல் எனும் மெய்யெழுத்துகளுக்கு முன் நெடில் வந்தால் அந்த மெய்யெழுத்து 'கள்' விகுதியுடன் ஒட்டும்போது அது திரிவுபடாது.

- ல், ம், ள் எனும் மெய்யெழுத்துக்கு முன் குறில் வந்தால் அந்த மெய்யெழுத்து "கள்" விகுதியுடன் சேர்ந்து திரிவுபடும்.

பழையன ஏற்றுக்கௌ்வதும் காலமாற்றத்திற்கேற்ப அவை மாறுதல் அடைவதும் இயல்பான ஒரு விடயமாகும். எடுத்த எல்லாவற்றிற்கும் தொல்காப்பியம் சொல்கிறது; நன்னூல் சொல்கிறது என்று சொல்லிக்கொண்டு இருக்க முடியாது. அவர்கள் தங்கள் காலச் சிந்தனைகளைச் சொல்லி இருக்கிறார்கள். அதனை மீளாய்வு செய்வது தவறில்லைத்தானே!

"தையல் சொல் கேளேல்" என்று பழந்தமிழ்புலவரான ஔவையார் சொல்லியிருக்கிறார். இதன் அர்த்தம் என்ன? "பெண்கள் சொல்லும் எதையும் கேளாதீர்கள்" என்பதாகும்.

அப்படியென்றால், ஔவையார் சொன்ன "தையல் சொல் கேளேல்" என்பைதயும் நாம் கேட்கக் கூடாதல்லவா? ஏனென்றால், ஔவையார் என்பவரும் ஒரு பெண்தானே!

சரி, அவர் சொல்லும் இக்கூற்றினைக் கேட்போம் என்று வைத்தால், ஔவையார் சொன்ன நீதிநூல்கள்; அறநூல்கள் யாவும் இனித் தேவையில்லை என்றாகிவிடும் அல்லவா?

ஆக, நல்லவற்றை தெரிவு செய்து அவற்றினை தக்கபடி மக்களிடத்தில் சேர்ப்பித்தல் மூலமே யாரும் வெற்றி பெறுகின்றனர்.

# 04.
# ஒரு பாடல் ; ஒரு குறள் ; சில பழமொழிகள்.

பழந்தமிழ்ப் பாடல்கள் எல்லாமே தமிழ் இலக்கிய இரசனைக்கு உரமூட்டிச் சென்றுள்ளன, என்று சொன்னால் அதிலேதும் பொய்யில்லை. கம்பனின் கம்பராமாயணப் பாடல்கள் மற்றும் தனிப்பாடல்கள், ஔவையாரின் பாடல்கள், திருவள்ளுவரின் குறட்பாக்கள் எல்லாமே தமிழின் பெருமை சொல்பவை ஆகும்.

ஔவையார் ஒருவர் அல்லர் என்று சொல்கின்றனர். பல்வேறு காலங்களில் ஔவையார் என்ற பெயரில் பலர் வாழ்ந்துள்ளனர். ஆனாலும், அவர்கள் வாழ்ந்ததிற்கான சரியான வரலாறு இல்லை என்ற காரணதிற்காக மூன்று வெவ்வேறு காலங்களில் மூன்று ஔவையார்கள் வாழ்ந்தனர் என்று ஆய்வாளர்கள் வகைப்படுத்துகின்றனர்.

### முதலாம் ஔவையார்

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த சங்ககாலத்து ஔவையார் இவராவார். சங்ககால இலக்கியங்களான அகநானூறு, புறநானூறு, நற்றிணை, குறுந்தொகை எனும் நான்கு நூல்களிலும் உள்ள பாடல்களில் 59 பாடல்கள் இவரின் பாடல்களாகும்.

### இரண்டாம் ஔவையார்

கி.பி. 12 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஔவையார். இவராவார். இக்காலத்திலே ஒருவருக்கொருவர் போட்டி வைத்துத்

தமிழை வளர்த்தவர்கள் இரண்டுபேர். ஓரே அரச சபையில் போட்டிநிலைக் கவிஞர்களாக அவர்கள் இருவரும் இருந்தனர். இதனால், தமிழ் இன்னும் ஊண்டி வளர்வதற்கு இந்தப்போட்டியே காரணமாகவும் இருந்துள்ளது. இவர்களில் ஒருவர் ஔவையார், மற்றவர் கம்பன்.

இக்காலத்து ஔவையார் பாடிய பாடல்கள் தனிப்பாடல் திரட்டு வடிவில் தொகுக்கப்பட்டுள்ளன. அதில் 71 பாடல்கள் உள்ளன. 310 குறட்பாக்கள் அடங்கிய ஔவைக்குறள் எனும் தத்துவ நூலினையும் இயற்றியுள்ளார். இதனால், இவர் தத்துவப் புலவர் எனவும் அழைக்கப்பட்டார்.

**மூன்றாம் ஔவையார்**

கி.பி. 16 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஔவையார். அதிவீரராம பாண்டியர் அரச அவைப் புலவராகப் போற்றப்பட்டவராவார். ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி ஆகிய அறநூல்களைப் பாடியவர். இவற்றில் மொத்தமாக 273 பாடல்கள் உள்ளன. இதனால் இவர் நீதிநூற் புலவர் எனவும் அழைக்கப்பட்டார்.

**ஔவையாரும் கம்பனும்**

ஒருமுறை அரச அவையில் ஔவையாரை மட்டந்தட்டும் நோக்கில் கம்பர் ஒரு பாடலடியினைப் பாடினார். அதுவொரு விடுகதைபோல் அமைந்த பாடலடியாகும். அந்தப்பாடலடி இதுதான்.

*"ஒருகாலடி நாலிலைப் பந்தலடி"*

இதற்கான விடை ஆரைக்கீரையாகும்.

கேள்வி கேட்கும் உத்தியில் அடி என்பதை இணைத்து ஒவையாரை அடி (எடி) என்று பேசிவிட்டேன் என கம்பன் இறுமாப்புடன் இருந்தார்.

இதற்கு ஒளவையார் பதில் சொல்லும்போது அப்பதில் கம்பனை அடா (எடா) என்று அழைப்பதாகவும் அமைந்திருந்தது. இதனால், தலைகுனிந்தது கம்பன்தான்.

ஆண்களின் அடக்குமுறைக் கருத்துக்கு எதிராகக் குரல் கொடுக்கும் பழக்கம் ஒளவையார் காலத்திலேயே ஆரம்பித்துவிட்டது என்பதுதான் உண்மை.

ஆக, ஒளவையாரின் பதில் இப்படித்தான் இருந்தது.

அசிங்கமானவனே; எருமை மாடே; கழுதையே; ஒன்றும் விளங்காதவனே; குரங்கே; ஆரைப்பார்த்தெடா இப்படிச் சொன்னாய்? என்றுதான் பொருள் நயக்கவும் முடிகிறது. ஆனாலும், ஒவையாரின் பதில் நாகரிகமாக இருந்தது.

கம்பன் கேட்ட கேள்விக்கு ஒளவையாரின் பதில் ஒரு பாடலாக அமைந்திருந்தது. அது பின்வருமாறு.

*எட்டேகால் லட்சணமே எமனேறும் பரியே*
*மட்டில் பெரியம்மை வாகனமே முட்டமேல்*
*கூரையில்லா வீடே குலராமன் தூதுவனே*
*ஆரையடா சொன்னாய், அது*

தமிழ் இலக்கங்களில் எட்டு என்பதற்குப் பதிலாக 'அ' எழுத்தினையும், பின்னங்களிலே கால் (நான்கில் ஒன்று) என்பதிற்குப் பதிலாக 'வ' எனும் எழுத்தினையும் பயன்படுத்துகிறோம்

இனி ஒளவையார் சொன்ன பாடலுக்கு வருவோம்.

ஔவையாரின் இப்பாடலிலே உள்ள முதல் அடியிலே (முதல் வரியிலே) முதலாவது சொல்லாக வருகின்ற 'எட்டேகால்' என்பதிலுள்ள 'எட்டு' என்பதற்கு 'அ' என்ற எழுத்தையும் 'கால்' என்பதற்கு 'வ' என்ற எழுத்தையும் இட்டு வரும் சொல்லை அடுத்து வருகின்ற 'லட்சணமே' என்ற சொல்லோடு இணைத்து வாசித்துப் பாருங்கள். அவலட்சணமே! என்ற சொல் வரும். அதாவது அசிங்கமானவனே!

'எமனேறும் பரியே!' என்பது 'எமனேறும் வாகனமே!' எமனின் வாகனம் எருமை மாடாகும்! அதாவது, 'எருமை மாடே!' என அமைந்து விடுகிறது.

'மட்டில் பெரியம்மை வாகனமே!' என்பது 'மூதேவியின் வாகனமே!' அதாவது, 'கழுதையே!' என அமைந்து விடுகின்றது.

ஒரு கட்டடத்திற்கு கூரையில்லாவிட்டால் எஞ்சியிருப்பது குட்டிச்சுவர். 'முட்டமேல் கூரையில்லா வீடே!' என்பது 'குட்டிச்சுவரே!' அதாவது, 'ஒன்றும் விளங்காதவனே!' என அமைந்து விடுகின்றது.

'குலராமன் தூதுவனே!' என்பது 'இன்னொருமொழியில் அமைந்த இராமனின் கதையினை தமிழில் எழுத தூதாக நின்றவனே!' அல்லது 'இராமனுக்குத் தூதாக வந்த அனுமனே!' அதாவது 'குரங்கே!' என அமைந்து விடுகின்றது.

'ஆரையடா சொன்னாய், அது!' என்பது 'நீ சொன்னது ஆரைக்கீரையத்தான்!' என அமைந்து விடுகின்றது.

ஆக, கம்பன் கேட்ட விடுகதைக்குப் பாடலிலே பதில் சொன்னார், ஔவையார். பதில் சொன்னது மட்டுமல்லாமல் ஔவையாரை அடி (எடி) என்று தரக்குறைவாகப் பேசிவிட்டேன் என்று நினைத்த கம்பனை அடா (எடா) என்று துணிந்து சொன்ன ஔவையின் விவேகத்தையும் வீரத்தையும் போற்றலாமல்லவா?

## பழமொழிகள்

- *சட்டியில் இருந்தால்தானே அகப்பையில் வரும்*

கறியோ, சோறோ, பாலோ, தயிரோ எதுவானாலும் சட்டியில் இருக்கும் போது தான் அவற்றினை அகப்பையால் அள்ளும்போது அது அகப்பையில் தங்கி வரும். இதுவே இப்பழமாழிக்கான நேரடிப் பொருளாகும். இதனை வேறு எவற்றோடு ஒப்பீடு செய்தும் பொருள் நயக்கலாம். ஆனால், இதற்கு இன்னொரு பொருளும் கொள்ளலாம்.

அதாவது, சட்டி என்றால் ஆறு என்று ஒரு பொருள் உண்டு. கல்யாணமான ஒரு பெண்ணுக்கு நீண்ட காலங்களாக பிள்ளை கிடைக்காத போது, ஆறு நாட்களுக்கு விரதமிருந்தால் அப்பெண் பிள்ளை கிடைக்கும் பலனை அனுபவிப்பாள் என்று பொருளாகும்.

விரதம் இருக்கும் காலங்களிலிலும் சமிபாட்டுக் கலங்கள் செயற்படுகின்றன. சமிபாட்டுச் செயல் நடைபெறும்போது, சமிபாட்டுக்கலங்கள் உடலிலுள்ள கொழுப்பினை இயல்பாக உறுஞ்சி எடுத்துவிடுகின்றன.

இத்தகைய செயற்பாட்டினாலே கரு தங்குவதற்குத் தடையாக இருந்த உடற்கொழுப்புகள் கரைந்து கொள்வதால் அகப்பையில் (அகம் + பை = அகப்பை = கருப்பை) கரு தங்கிவரும் என்று பொருளாகும்.

- *அடியாத மாடு படியாது*

இது பொதுவாக மாணவர்களிடம் ஆசிரியர் கூறுவதாகவோ, தங்கள் பிள்ளைகளிடம் பெற்றோர் கூறுவதாகவோ அமையும் ஒரு பழமொழி ஆகும். அதற்கான நேரடிப்பொருள் விளங்கிய மாணவர்கள் அல்லது பிள்ளைகள் ஒழுங்காக இருந்து படிக்கத் தொடங்கி விடுவார்கள். ஆனால், இதற்கான பொருளை வேறுவிதமாகவும் நோக்கலாம்.

அடி என்றால் தர்மம் என்றும்; மாடு என்றால் செல்வம் என்றும்; படியாது என்றால் தங்காது என்றும் பொருள் கொண்டு பார்க்கலாம்.

அடியாத மாடு படியாது என்றால் தர்மம் செய்யாத செல்வம் தங்கி நிற்காது என்று பொருளாகும். எம்மிடம் அளவுக்கு அதிகமாகச் செல்வம் உள்ளபோது இல்லாதவர்களுக்குக் கொடுத்து உதவினால்தான் எம்மிடம் இன்னும் இன்னும் செல்வம் கூடிக்கொண்டு செல்லும் என்ற அர்த்தமும் கொள்ளலாம்.

- *களவும் கற்று மற*

எங்களிடம் இருக்கின்ற பொன், பணம், பொருட்கள் எப்படி எப்படியெல்லாம் களவு போகும் எனும் வழிகளை நாமும் தெரிந்திருக்க வேண்டும். அப்பொழுதான், எங்களிடம் இருக்கின்ற பொருட்கள் களவு போகாமல் பாதுகாத்து வைத்துக்கொள்ளலாம். அதுமட்டுமல்லாமல், யாரிடமும் ஏமாறாமலும் தப்பிக்கொள்ளலாம் என்பது இப்பழமொழியின் நேரடிப்பொருளாகும். ஆனால், "களவும் கத்தும் அற" எனும் பழமொழிதான் "களவும் கற்று மற" என மருவி வந்திருக்க வேண்டும்.

- *குழலினிது யாழினிது என்பர் தம்மக்கள்*
  *மழலைச் சொல் கேளா தவர்*

புல்லாங்குழல் இசையும் யாழிசையும் இனிமையானது. ஒரு குழந்தை பிறந்து தவழ்ந்து, எழுந்து நிமிர்ந்து இருக்கிறபோது அக்குழந்தை பேசும்மொழி இருக்கிறதுானே! அதைத்தான் மழலைமொழி என்கிறோம்.

மழலைமொழி கேட்கின்றபோது புல்லாங்குழல் இசையும் யாழிசையும் இனிமையாகத் தெரியாதாம். இதுவே மேற்படி குறளின் நேரடிப்பொருளாகும்.

ஆனால், குழல் என்றால் ஆண் என்று ஒரு பொருள் உண்டு. யாழ் என்றால் பெண் என்று ஒரு பொருள் உண்டு. குழல் இனிது என்றால் ஆண் இனிமையானவன் என்று பொருளாகும். அதாவது, தன்னுடைய பெண்ணுக்கு அந்த ஆண் இனிமையானவன். யாழ் இனிது என்றால் பெண் இனிமையானவள் என்று பொருளாகும். அதாவது, தன்னுடைய ஆணுக்கு அந்தப் பெண் இனிமையானவள்.

இப்படி ஒருவருக்கொருவர் இனிமையாக இருக்கின்ற இவர்களுக்கு ஒரு குழந்தை பிறந்து மழலைமொழி பேசும் காலத்தில், அப்பேச்சோசை கேட்டால் கிடைக்கும் மன இன்பம் மிகப்பெரிய இன்பமாகத் தெரியுமாம்.

ஆணும் பெண்ணும் தாம் ஒருவருக்கொருவர் பரிமாறும் இன்பத்தைக் காட்டிலும் மழலைமொழி அவர்களுக்குப் பேரின்பமாகத் தோற்றுமாம். அதனால்தான் மழலை மொழியினைத் தெய்வமொழி என்கின்றோம்.

# 05.
## துளிப்பா இலக்கியம்

"இலக்கியம் என்பது வாழ்வின் ஓர் ஒழுங்கு; அதில் ஒவ்வொரு எழுத்தாளரும் தமது பக்கங்களைச் சேர்க்கிறார்கள்" என்று சொல்கிறார். - விசோரியன் பெலின்ஸ்கி.

இலக்கியம் என்பது வாழ்க்கை; மக்கள்; சமூகம்; உலகம் இவைகளின் தரிசனம் என்றுகூடச் சொல்லலாம்.

இலக்கியம் எனும் படைப்புச் செயல் மானுட அனுபவத்தின் துணையுடன் புதிய அனுபவமும் கொண்டு உற்பவமாக்கப்படுவது ஆகும். அதை எல்லோரும் சிருஸ்டித்துவிட முடியாது.

இலட்சம், கோடி என்று வாழும் மக்கள் மத்தியில் நூற்றுக்கணக்கானவர்கள் புனைவுகாரர்களாக இருக்க, அப்புனைவு ஆக்கத்தினைப் படிக்கவென்று ஆயிரம், இலட்சம் என்று வாசகர்கள் உருவாகி விடுகிறார்கள். இதுவே சிறந்த படைப்பாளருக்கான தகுதி ஆகும்.

மக்களிடம் உள்ளதை மக்களிடம் இருந்து பெற்று அவற்றினை மக்களுக்குத் தர முயலும் அந்த முயற்சி விந்தையானது. அதற்காக அவன் கையாளும் மொழிகளும், வார்த்தை யாலங்களும் அவனுக்கென்றே உரித்தாகிவிடுகின்றன.

இந்த வகையிலே நாவல், சிறுகதை, கவிதை, கைக்கூ, கஜல் போன்ற வடிவங்களில் ஏதோவொன்றை இலக்கியம் தனக்கான ஓர் உடலினை எடுத்துவிடுகிறது. மேலும், இலக்கியத்திற்கான வடிவங்கள் இவை மாத்திரம் தான் என்று சொல்லிவிடவும் முடியாது. அவை இன்னும் இன்னும் புதுப்புது வடிவங்களில் தோற்றம் பெற்றுக்கொண்டுதான் இருக்கப் போகின்றன.

நாங்கள் சின்ன வயதாக இருந்த காலத்தில் பாட்டி வடை சுட்ட கதையினைக் கேட்டு சுவார்சியமாக ரசித்திருக்கிறோம். அந்தக் கதை சொல்ல வருகிற உட்பொருள் விடயத்தையும் புரிந்திருக்கிறோம். இக்கதையினை எங்களுக்குப் பின்னர் வந்த சந்ததியினருக்கும் சொல்லி மகிழ்ந்திருக்கிறோம். ஆனால், ஒரு கட்டத்தில் இக்கதை பல்வேறு நுட்பங்களாக விரிவுபட்டு மாணவர்களையும், பெரியவர்களையும் சிந்திக்கும் வகையில் மாற்றம் பெற்ற விதங்களும் வியப்பானவைதான்.

அதேகதை இன்று, இன்னும் எவ்வாறு நவீனமயப்படுத்தப் பட்டிருக்கிறது என்பதைப் பாருங்கள். ஓரளவு பெரியளவிலான இக்கதையினை நான்கே நான்கு வரிகளில் சொல்லியிருப்பது சிந்திக்கத்தக்கது. மிகிந்தலை ஏ.பாரிசின் கவிதைத்தொகுதி வெளியீட்டு வைபவத்தில் கவிஞர் அமீர் அலி சொன்ன நான்கு வரிக்கதை, இது.

பாட்டி வடை சுட்ட கதையிலே வருகிற வடைக்குப் பதிலாகக் கேக்கும் (Cake), நரிக்குப் பதிலாக கொக்கும் என மாற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த நான்கு வரிக் கவிதையினைக் கேட்கும்போது மனதுக்குச் சுவார்சியமாகவும் இருக்கிறது. அதை மற்றவர்களுக்கும் பகிர்ந்துவிட வேண்டும் என்ற ஆவல் எனக்குள்ளும் துருத்தி வரவே செய்கிறது.

இந்த நான்கு வரிப்பாடலானது பேச்சோசைப் பாங்கிலும், ககரம் கலந்த சந்ததமும் என இசையாக இணைந்திருக்கிறது.

"கோர்க்க" என்பது "கோக்க" எனவும், "கேட்க என்பது "கேக்க" எனவும், "கக்குதல்" என்பது "கக்க" எனவும் "கெக்க" என்பது "பறந்தது" எனவும் சமமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது.

அப்பாடல் இதுதான்,

*காக்கா கேக்கைக் கோக்க*
*கொக்கு கேக்கைக் கேக்க*
*காக்கா கேக்கைக் கக்க*
*கொக்கு கெக்கக் கெக்க*

கதை புரிந்துவிட்டதுதானே! இந்த அவசரயுகத்திலே, காலத்தின் அவசியம் கருதி மிகச் சுருக்கமாகச் சொல்லப்பட்ட கதையாக இதை நோக்கலாம்.

## சில துளிப்பாக்களும் பல சிந்தனைகளும்

கைக்கூ என்பதை துளிப்பா என்றும் அழைப்பார்கள். துளிப்பாவின் தாயகம் ஜப்பான் ஆகும். கவிதைக்கு எப்போதும் மென்மை உணர்வு இருக்கும். அதிலே, துளிப்பா என்பது மூன்றடிகளால் ஆனது. படிப்பவருக்கு ஒரு மனவிசைத் தெறிவினைக் கொடுக்கக்கூடியது.

முதல் இரண்டடிகளும் படித்து முடித்த பின்னர், சின்ன வினாடிகள் விட்டு மூன்றாது அடியினைப் படிக்கின்றபோது படிப்பவர் மனதிலே ஒரு மாற்றத்தையும், வியப்பையும் ஏற்படுத்திவிடும். படிப்பவர் மனதுக்கு இனிய சுகத்தையும் கொடுக்கும். சிலவேளை வியப்புடன் கலந்த ஆச்சரியத்தையும் உண்டாக்கி விடும்.

இப்படி மூன்றடிகளில் உள்ள எல்லாவற்றையும் துளிப்பா என்று சொல்லிவிட முடியாது. துளிப்பாவில் உள்ள மூன்று அடிகளும் முறையே ஐந்து ஏழு ஐந்து அசைவுகளில் காணப்பட வேண்டும் என்று ஜப்பான் துளிப்பா இலக்கியம் வரையறை செய்கிறது.

இனி, சில துளிப்பாக்களின் நயங்களைப் பார்ப்போம்.

*விதைப்பு*
*அறுவடையாய்*
*பாவங்கள்!*

- வினோ வரதன்

வினை விதைத்தவன் வினை அறுப்பான்; தினை விதைத்தவன் தினை அறுப்பான் என்பது தமிழ்ப்பழமொழி. நாங்கள் செய்யும் வினைக்கு ஏற்பவே நன்மைகளும் தீமைகளும் நம்மை வந்து சேர்கின்றன. ஒவ்வொரு தாக்கத்திற்குச் சமமானதும் எதிரானதுமான மறுதாக்கம் ஒன்று இருக்கும் எனும் நியூட்டனின் மூன்றாவது விதிக்கு இக்கூற்றுச் சமமானதாகும்.

ஆகவே, தீமை (பாவங்கள்) செய்வதையோ, எமக்குள்ளே தீமையான எண்ணங்களை (பாவங்களை) வளர்த்துக் கொள்வதையோ விட்டுவிட்டால் நிச்சயமாக எம்மைச் சுற்றி வருபவை எல்லாம் நன்மையாகவே இருக்கும்.

எமக்குள்ளே நன்மையான எண்ணங்கள் வளர மனதிலே சந்தோசம் பெருகும். ஆதலால், மகிழ்வாகவும் நிம்மதியாகவும் யாரும் வாழலாம். ஆகவே, தீமை செய்வதையோ; தீமை எண்ணங்களை மனதில் வளர்ப்பதையோ மறந்தால் நிம்மதியாக வாழலாம் என்பதைச் சொல்லாமல் சொல்கிறது இக்கைக்கூ.

*மனச்சாட்சி*
*கடவுள்*
*பொதுச்சொத்து...?*

வினோ வரதன்

சாதாரணமானவர்களில் பெரும்பாலானோர் எப்பொழுதும் பழி, பாவங்களுக்குப் பயந்தவர்களாகவும; மனச்சாட்சி ஒன்றைக் கையில் வைத்து நேர்மையில் நடப்பவர்களாகவும் இருப்பார்கள். இப்படியானவர்கள் யாரின் சொத்துகளையோ, தங்களுக்கான புகழையோ விரும்பமாட்டார்கள். அமைதியாகவும், அடக்கமாகவும்

இருந்துமற்றவர்களுக்கு ஆபத்து வராதவண்ணம் வாழ்ந்து வருவார்கள். ஆனாலும், பெரிய மனிதர் என்ற போர்வையில் உள்ள பலர், தொண்டு நிறுவனங்கள் மூலமாக சேவைகள் செய்வதுபோல் பலவற்றைச் செய்வார்கள். ஏழைகளிடம் போய்ச் சேரவேண்டிய சொத்துகளின் பெரும் பகுதியினை தாமே சுருட்டிச் சென்றுவிடுவார்கள்.

மனச்சாட்சிதான் உண்மையான கடவுள்; மனச்சாட்சி தான் உண்மையான கடவுள்; என்று மேடைக்கு மேடை முழங்கி அப்பாவிச் சனங்களைப் பயப்படுத்தி மௌனமாக்குவர். இது ஓர் உத்தி என்றுதான் சொல்லவேண்டும். ஏனென்றால், அப்பாவிகள் மனச்சாட்சிக்குப் பயந்தவர்கள். அதனால் ஒதுங்கிவிடுவார்கள்.

பெரிய மனிதர் என்ற போர்வையுடுத்தோர் சமூகத்தை ஏமாற்றிக்கொண்டு கொள்ளையடித்துக் கொண்டு திரிவார்கள். ஆதலால், பயம் அப்பாவி மக்களுக்கு; இலாபம் மட்டும் பெரிய மனித போர்வையினருக்கு. இப்படியானவர்கள் மனச்சாட்சிக்குப் பயமில்லாதவர்கள்.

இப்படியானவர்களில் பெரும்பாலானவர்கள் படித்துப் பட்டம் பெற்றவர்களாகவும், உயர் பதவியில் இருப்பவர் களாகவும், உயர் அந்தஸ்த்தினை மாலையாய் அணிந்தவர்களாகவும் காணப்படுவர்.

*நாய் குரைக்கும் இரவு*
*திடுக்கிடும் தென்னங்குருத்துகள்*
*விடியலில் தோரணமா?*

-
இ.சு.முரளிதரன்

ஈழத்தமிழர்களின் அவலங்களைச் சொல்லும் கைக்கூ இது.

ஈழத்தில், இரவிலே நாய்கள் குரைக்கின்றன என்றால், வீதிகளில் இராணுவம் நிற்கிறது என்று பொருளாகும். இராணுவத்தால் சுற்றி வளைக்கப்பட்டிருக்கிறது அந்த ஊர். அங்கே, இந்த இராணுவம் யரோ ஒருவரையோ அல்லது பலரையோ சுட்டு சாகடிக்கப் போகிறது. அந்த அப்பாவிகள் யார் யார் என்பது யாருக்குமே தெரியாது.

இப்படியான சம்பவங்களால் இளைஞர், யுவதிகளைப் பிள்ளைகளாக வைத்திருக்கும் ஈழப்பெற்றோர் ஏக்கம் கொள்ளத் தொடங்குவர். அவர்கள் போலவே தென்னங்குருத்துகளும் ஏக்கங்கொள்ளத் தொடங்குமாம்.

காவோலைகள் விழும் போது குருத்தோலை சிரிக்குமாம். அதாவது, குருத்தோலை விரிந்து வரும் என்று பொருளாகும். இங்கே, குருத்தோலைகள் என்று சொல்லப்படுகிற இளைஞர், யுவதிகள் ஏக்கம் கொள்வர் என்று சொல்ல வருகிறது கைக்கூ. ஏனென்றால், யாராவது இறந்தால் வீதிகளிலே தோரணம் கட்டுவார்கள்தானே! அதற்காக தென்னங்குருத்துகளைத்தானே வெட்டிச் சாய்ப்பார்கள்! எம் இளையவரின் நிலையினை முன்னுணர்ந்து ஏங்கிவிடும் தென்னங்குருத்துகளின் காலத்தினைச் சொல்கிறது, இக்கைக்கூ. குறியீடு, படிமம் கலந்து எழுதப்பட்ட அழகான கைக்கூ, இது.

*கடலை அடக்கிய*
*அகத்தியக் கமண்டலம்*
*கவிதை!* எ.மு.இராசன்

கவிதை என்றால் என்ன? அக்கவிதையின் அழகு என்பது என்ன? என்பவற்றைச் சொல்லும் கைக்கூ கவிதை, இது. கடுகு சிறிதாக இருந்தாலும் அதன் காரம் குறைவதில்லை. அது போல, அகத்தியர் பார்ப்பதற்கு சின்னத் தோற்றமுடையவராய் இருப்பார். அப்படி அவர் தோற்றினாலும் அவரின் ஆற்றல் கண்டு வியக்காதவர்கள் யாருமில்லை என்றே சொல்லலாம்.

அகத்தியர் போலவே அவரின் கையிலுள்ள கமண்டலும் சிறிய தோற்றமுடையதாகும். கடல் எனும் பரந்து விரிந்த நீரினை அந்தக் கமண்டலத்திற்குள் அடக்கி வைத்திருப்பார். அது போல, கவிதை என்பது சிறிய தோற்றமாகத் தெரிந்தாலும் அதற்குள்ளே அழ்கு, நயம், அர்த்தம், ஓசை, பொருள் என பல உள்ளடங்கி வருகின்றன. இவற்றினால் இது படிப்பவருக்கு சுவையூட்டுவதை உணரலாம்.

*வெள்ளையடித்த சுவர்*

*மேலும்... அழகாய்*

*குழந்தைகளின் கிறுக்கல்கள்!*

-புதுவை சீனு தமிழ்மணி

சுவர் அழகாகவும், தூய்மையாகவும் இருக்க வெள்ளை அடிக்கிறோம். இப்படி அழகாய் வெள்ளை அடிக்கப்பட்ட சுவரிலே குழந்தைகள் கிறுக்கி விளையாடுவார்கள். இப்படியான நேரங்களில் குழந்தைகளை நாம் பேசுவது கிடையாது. சுவரிலே குழந்தைகள் கீறிய கிறுக்கல்களைப் பார்த்துச் மனதிலே சந்தோசம் வளர்த்துக் கொள்வோம். வெள்ளை அடிக்கப்பட்ட சுவர்களைக் காட்டிலும், அச்சுவர்களிலே குழந்தைகள் கிறுக்கும் கிறுக்கல்களே மிக அழகாகத் தெரிகின்றன. அவையே, மனதுக்கு நிம்மதியும் தருகின்றன.

*முறிந்த கிளை*

*அழகு*

*பசித்த ஆடுகள்!*

-புதுவை சீனு தமிழ்மணி

இங்கே முரண் அழகு உத்தி கையாளப்பட்டிருக்கிறது.

மரங்களை நாம் விரும்பி வளர்க்கிறோம். மரங்களை வளர்க்கும் இடங்கள் வீடாக இருக்கலாம் அல்லது வீதி ஓரங்களாக இருக்கலாம். அப்படியான ஒரு மரத்தின் கிளை முறிந்து விழுந்துவிட்டால், வீட்டிற்கோ அல்லது வீதிக்கோ இடைஞ்சல் என்று சொல்லுவோம். முறிந்து விழுந்த கிளைகளை எப்படியோ அகற்றிவிடப் பாடுபடுவோம்.

அகற்றுதல் என்றால் அதன் அர்த்தம் என்ன? எமக்குப் பிடிக்கவில்லை என்றுதான் அர்த்தம். அந்த இடத்தில் மரக்கிளை முறிந்து விழுந்து கிடப்பது அழகில்லை என்று பொருளாகும்.

முறிந்து விழுந்து கிடக்கும் கிளைகளால், போக்கு வரத்திற்கு இடைஞ்சல் இருக்கும். ஆனால், இவ்விதம் முறிந்து விழுந்து கிடக்கிற கிளைகளைப் பார்க்கிற பசி ஆடுகளுக்கு, அக்கிளையிலுள்ள குழைகள் அழகாகவும், அக்குழைகளை மேயும்போது இன்பமாகவும் இருக்கும்.

*ஆழ்ந்து உறங்கியவரை*
*அலறி எழுப்பியது*
*முதற் சுவாசம்!*

-மைதிலி தயாபரன்

தாயின் கருவிலே குழந்தை சுகமாய் உறங்குகிறது. அது பிறப்பெடுத்து கருவறையிலிருந்து வெளியே வந்தவுடன் திடுக்குற்றதாக எகிறிக்கொள்கிறது. அதுவரை தாயின் சுவாசத்திலே பிணைக்கப்பட்டிருந்த குழந்தை, இக்கணத்தில் இருந்துதான் தானாகச் சுவாசிக்கத் தொடங்குகிறது. அப்படி என்றால் குழந்தைக்கு இதுதானே முதல்சுவாசம்.

இங்கே, முதல் சுவாசம் என்பதின் ஊடாக தாயின் உன்னதம் சொல்லாமல் சொல்லப்படுகிறது. குழந்தை கருவறையை விட்டு வெளிவரும் காலம் வரை தனக்கும் குழந்தைக்குமாகச் சேர்த்துச் சுவாசிக்கிறாள், தாய் என்பதைச் சொல்லாமல் செல்கிறது கவிதை.

*முண்டியடித்தபோது விழுந்து*
*முடமான நண்பர்கள்*
*முன்னால் என் பயணம்!*

– மைதிலி தயாபரன்

பொறுமைதான் வெற்றிக்கு முதல் காரணி. நாம் தங்கி வாழ இடம் தந்த பூமியைத் தோண்டுகிறோம்; குண்டுகள் போட்டு சிதைக்கிறோம்; குப்பைகளை வெட்டிப் புதைக்கிறோம்; என்ன செய்தபோதும் பூமாதேவி பொறுத்துக் கொள்கிறாள். பூமித் தாய்க்கு எப்படி எது செய்தபோதும், மீண்டும் மீண்டும் எம்மை அவள் தாங்கிக் கொள்வாள்.

பொறாமையைப் போல் ஓர் ஆயுதம் உலகிலே இன்னும் கண்டுபிடிக்கவில்லை என்றுதான் நான் சொல்லுவேன். எந்தவொருவிடயத்திலும் நீ ஜெயிக்க வேண்டும் என்றால் உன் எதிரியானவன் மீது பொறாமைப்பட வேண்டும். உனக்குள் ஏற்படுகிற பொறாமை உன்னை உயர்த்தும் உந்து சக்தியாக இருக்க வேண்டுமே தவிர, அதனால் மற்றவனை வீழ்த்தவோ, மற்றவனுக்குத் தீங்கு விளைவிக்கவோ கூடாது.

மாறாக மற்றவன் தாழ்ந்துவிட வேண்டும் என்று ஒருவனுக்குள் ஏற்படும் அவசரம், ஆவேசம், கோபம் அடங்கிய அவனது பொறாமை அவனைக் கீழே கொண்டு சென்றுவிடும். மற்றவனை நான் வென்றுவிட வேண்டும் என்று நினைப்பது தவறில்லை. மற்றவனை அழித்தாவது வெற்றி பெறவேண்டும் என்று நினைப்பதுதான் தவறாகும். இதற்காக ஒருவன் நிதானமுடன் காத்திருந்து ஓர் ஒழுங்கு முறையிலே போராடுவான் ஆயின் அவன் அந்த வெற்றியை அடைவான். அவன் முன்னோக்கிச் சென்றுகொண்டே இருப்பான். மற்றவர்கள் முடமாகிப் போனவர்கள் போல் ஒரு மூலையிலே விழுந்து கிடப்பதையே காண முடியும்.

*அம்மாவின் பொன்னகை*
*வட்டிக்கடையில்*
*உந்துருளி ஆசை!*

-மைதிலி தயாபரன்

தற்காலத் துலங்கலை வலு அழகாய் எடுத்துச் சொல்லும் கைக்கூ, இது. இன்றைய பெற்றோர்கள் பலர் தங்கள் பிள்ளைகள், கஸ்ரம் என்பதை உணரக்கூடாது என்றுதான் நினைக்கிறார்கள். இப்படியான பெற்றோர்களின் சிந்தனையிலே மறைமுகமாகப் பல விடயங்களை மற்றவர்களுக்குச் சொல்லிச் செல்வதை நான் அவதானித்திருக்கிறேன்.

தன் மகனுக்கென்று ஓர் எதிர்காலம் உண்டு; அவன் இந்த சமூகத்திலே எத்தனையோ வித மனிதர்களைச் சந்திக்கக் காத்திருக்கிறான்; அப்படியானவர்களில் எவர்கள் எப்படியானவர்கள் என்பதை அறிந்து, அதற்கு ஏற்றால் போல் வாழ்ந்து தன் ஸ்த்திரநிலையினை உருவாக்க வேண்டும்.

ஆனால், இவற்றை அந்தப் பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுக்க அந்தப் பெற்றோர் மறந்து விடுகிறார்கள். இது பெண்பிள்ளைகள் விடயத்திலும் பொருந்தும்.

மாறாக மற்றவர்களுக்குப் போட்டியாக நடந்து கொள்வது போலவே, தங்கள் பிள்ளைகளுக்குள்ளும் பொருத்தமில்லாத எண்ணங்களை வளர்த்தெடுக்கிறார்கள்.

நவீன ரக கைபேசிகள், நவீன ரக உந்துருளிகள் என்று காலம் பறந்து கொண்டிருக்கிறது. ஒரு மகன் இவற்றிற்கெல்லாம் ஆசைப்படுகிறான். தன் குடும்ப வறுமை, தன் பொறுப்புகள் யாவற்றயையும் மறந்து போகிறான். கைபேசிக்கும், உந்துருளிக்கும் ஆசைப்படும் இந்த இளைஞன் தன் தாயிடம் பணத்திற்கு அடம்பிடிக்கிறான். கடைசியில் தாயும் அவன் எண்ணங்களுக்கு இசைகிறாள்.

இத்தனை காலமாகச் சேமித்துச் சேர்த்த தன் சொத்தின் அடையாளமாக இருந்த பொன் நகைகளை வட்டிக்கடையில் கொடுத்து அதற்குப் பணத்தைப் பெறுகிறான், தனயன். அந்தப் பணத்திலே புதிதாக உந்துருளி வாங்கி ஓடித்திரிகிறான்.

அவன் சிறு வருமானம் எதுவும் இல்லாதவன். உந்துருளியினை இயக்கி ஓடித் திரிவதற்கான பெற்றோல் மற்றும் திருத்தச் செலவுகள் யாவற்றிற்கும் மீண்டும் தன் ஏழைத்தாயின் கைகளையே எதிர்பார்த்துக் காத்து நிற்கிறான், இந்த இளைஞன்.

பெற்றமனம் பித்து; பிள்ளைமனம் கல்லு என்பது இக்கைக்கூ கவிதை மூலமாக எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. இன்றைய இளையவர்களின் யதார்த்தங்களின் விம்பமாக இக் கவிதையினைச் சொல்லலாம்.

# 06.
## தொடைகள்

செய்யுள் ஒன்றில் தொடையின் பயன்பாடு என்ன? அவை எவ்வாறு பாடல்களில் சேர்ந்திருக்கின்றன போன்ற விடயங்களை சில பழந்தமிழ் பாடல்கள் மற்றும் திரையிசைப்பாடல்கள் மூலமாக சொல்ல முனைகின்றது இக்கட்டுரை. தொடை என்ற சொல்லின் பயன்பாடு தமிழ் இலக்கணத்திலும் கணிதச் செய்கைகளிலும் வேறு வேறு பொருள்பட பயன்படுத்தப்பட்டு வருகிறது.

கணிதத்திலே தொடை என்பது "நன்கு வரையறுத்த கூட்டம்" என வரைவிலக்கணப்படுகிறது.

{1 இற்கும் 10 இற்கும் இடைப்பட்ட முதன்மை எண்கள்} எனும் தொடையானது சங்கிலி அடைப்புக்குறிகளினால் வரையறுத்துக் காட்டப்பட்டுள்ளது.

அடைப்புக்குறியினுள் சொல்லப்பட்ட நிபந்தனையின்படி, அவ்வடைப்புக்குறியினுள் வரக்கூடியவை 2, 3, 5, 7 என்பவை மாத்திரமே. இவை மூலகங்கள் என அழைக்கப்படுகின்றன. ஏனென்றால், அடைப்புக் குறிக்குள் வரக்கூடிய மூலகங்கள் இவை மட்டும்தான் என்று திடமாகச் சொல்லக் கூடியதாக இருக்கிறது.

இது போல,
{ஆங்கில உயிர் எழுத்துகள்},
{தேவாரம் பாடிய நாயன்மார்கள்},
{வானவில்லில் உள்ள நிறங்கள்},
{10 இற்கும் 50 இற்கும் இடைப்பட்ட 5 இன் மடங்குகள்}
இவற்றிற்கான மூலகங்களை உங்களால் திடமாகச் சொல்ல முடியும். ஆதலால் இவையும் தொடைகளாகும்.

இதிலிருந்து முற்று முழுதாக வேறுபட்ட ஒரு செயற்பாடாகவே தமிழ் இலக்கணத்தில் தொடை எனும் சொல் பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஆனாலும், அங்கும் வரையறை எனும் பதம் மறைமுகமாகத் தொக்கி நிற்பதை அவதானிக்கலாம்.

இனி விடயத்திற்கு வருகிறேன்.

தொடுக்கப்படுவது தொடை ஆகும். செய்யுள்களின் சீர்களும், அடிகளும் தொடுத்துச் செல்லுன்ற முறையுடன் சம்பந்தபபட்டிருப்பதால் இது தொடை என அழைக்கப்படுகிறது.

அதனால்தான் காலினையும் உடலினையும் தொடுக்கும் அங்கத்தினைத் தொடை என்கிறோம், போலும்.

தொடை என்பது யாப்பிலக்கணத்தில் உள்ள செய்யுள் உறுப்புகளின் ஒரு வகை ஆகும். செய்யுள்களின் ஓசை நயத்துக்கும், அவற்றின் இனிமைக்கும் தொடைகள் முக்கியமானவை ஆகும்.

**தொடை வகைகள்**

மோனைத்தொடை, இயைபுத்தொடை, எதுகைத்தொடை முரண்தொடை, அளபெடைத்தொடை, அந்தாதித்தொடை, இரட்டைத்தொடை, செந்தொடை என எட்டாக வகைப் படுத்தப்பட்டுள்ளன.

**தொடை விகற்பங்கள்**

தொடைகள் மொத்தம் எட்டு என்று பார்த்தோம். இவற்றிலே விகற்பம் பெறும் தொடைகள் 5 ஆகும். தொடை விகற்பங்கள், அடி; இணை; பொழிப்பு; ஒரூஉ; கூழை; மேற்கதுவாய்; கீழ்க்கதுவாய் என 7 உள்ளன.

விகற்பம் பெறும் 5 தொடைகளும் 7 விகற்பங்களும் 5X7 என வருகிறபோது அவை முப்பந்தைந்து தொடை விகற்பங்கள் ஆகிவருகின்றன. எனவே, தொடையும் தொடைவிகற்பங்களும் மொத்தமாக நாற்பத்தி மூன்று என்ற எண்ணிக்கையினைப் பெற்றுவிடுகின்றன. அதாவது, 8 + 35 = 43 என அமைகின்றது.

## தொடைக்கும் தொடை விகற்பத்துக்குமான வேற்றுமைகள்

தொடை, செய்யுளில் அடிதோறும் மேலிருந்து கீழ் நோக்கியும் பார்க்கப்படுகிறது.

தொடைவிகற்பம், அடிகளில் அமைந்துள்ள சீர்கள்தோறும் இடமிருந்து வலமாகப் பார்க்கப்படுகிறது.

குறிப்பு: தொடைவிகற்பம், இடமிருந்து வலமாகப் பார்க்கப் படுகிறது. எனினும், இயைபுத்தொடை மட்டும் வலமிருந்து இடமாகவே பார்க்கப்படுகிறது.

இதற்குக் காரணம் இயைபுத்தொடை, இறுதிச் சீரில் இருந்து தொடங்குவதாய் இருப்பதே ஆகும்.

### (1) மோனைத் தொடை

மோனை என்பது செய்யுள் அடிகளின் முதல் எழுத்துகள் ஒத்து வருதல் அல்லது ஒன்றி வருதல் ஆகும். அடிகளின் முதல் எழுத்துகள் மட்டுமன்றி சீர்களின் முதலெழுத்துகள் ஒன்றி வரினும் அது மோனையே ஆகும். இதனால் இது சீர்மோனை, அடிமோனை என இரு வகைப்படும்.

#### (அ) சீர்மோனைகள்

சீர்கள் தொடர்பில் வரும் மோனை சீர்மோனை எனப்படும்

உதாரணம்(1):

*பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை*

இந்த வெண்பா அடியிலே முதற்சீரின் முதல் எழுத்தாக வரும் 'பா' என்பது மூன்றாம் சீரின் முதலெழுத்தாகவும் வருகிறது. நாலாஞ்சீரின் முதலெழுத்தாக அதன் உயிரெழுத்து இனமான 'ப' வருவதால், இவ்வடி 1, 3, 4 ஆம் சீர்களில் மோனையாக அமைந்த அடியாகும்.

உதாரணம்(2):

*கற்க கசடற கற்றவை கற்றபின்*

இத்திருக்குறள் அடியில் 1, 2, 3, 4 ஆகிய எல்லாச் சீர்களிலும் 'க' என்னும் ஒரே எழுத்து மோனையாக வந்துள்ளது. இவ்வாறு அமைவது முற்று மோனை எனப்படும்.

**(ஆ) அடிமோனைகள்**

அடிகள் தொடர்பில் வருவது அடிமோனை என குறிப்பிடப் படுகிறது.

உதாரணம்(1):

*இன்னும் கொஞ்ச நேரம்*
*இருந்தால்தான் என்ன..?*

இப்பாடலின் இரண்டு அடிகளினதும் முதற்சீர்கள் 'இ' எனும் எழுத்தில் தொடங்குவதால் இதிலே அடிமோனை அமைந்துள்ளது.

உதாரணம்(2):

*ஒரு வார்த்தை கேட்க*
*ஒரு வருசம் காத்திருந்தேன்*

இப்பாடலின் இரண்டு அடிகளிலும் முதற்சீர்கள் 'ஒ' எனும் எழுத்தில் தொடங்குவதால் இது அடிமோனையில் அமைந்த ஒரு வடிவமாகும்.

உதாரணம்(3):

*உலகத் தமிழினமே எண்ணிப்பார் நீ*
*உறங்கினால் வரலாற்றில் யார்*
*உன்னை மன்னிப்பார்*

உதாரணம்(4):

*செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம்*
*அச்செல்வம் செல்வத்துள் எல்லாம் தலை*

இக்குறளில் முதல் அடியிலும் இரண்டாம் அடியிலும் முதல் எழுத்து 'செ' என்றே வந்துள்ளது. ஆகவே, இதுவும் மோனைத்தொடை வகையினமாகும். அடிமோனை சிறப்புக் குறைவானதாகும். அடிமோனைகள் அமைந்த பாடல்கள் மிகக் குறைவாக உருவாக்கப்பட்டுள்ளன.

அடிகள் தொடர்பில் சிறப்புப் பெறுவது எதுகையாகும். இது அடி எதுகை எனப்படும்.

## (2) இயைபுத் தொடை

ஒரு செய்யுளில் ஒன்றுக்கு மேற்பட்ட அடிகளின் இறுதி எழுத்து அல்லது இறுதிச்சொல் ஒத்து வரும்போது அது இயைபுத்தொடை என்று கூறப்படுகின்றது.

ஒரே அடியில் உள்ள சீர்களின் இறுதி எழுத்துகள் ஒன்றி வந்தாலும் அல்லது அடியின் இறுதிச் சொல் அல்லது சொற்கள் ஒன்றி வந்தாலும் அது இயைபுத்தொடை ஆகும்.

இதன்படி ஒரு செய்யுளில் இயைபுத்தொடை நான்கு வகையில் அமைய முடியும்.

அ. ஒன்றுக்கு மேற்பட்ட அடிகளின் இறுதி எழுத்துகள் ஒன்றுதல்.

உதாரணம் (1):

*ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை*
*இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை*
*நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை*
*புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே*

இப்பாடலிலே முதல் மூன்று அடிகளிலும் வரும் இறுதிச் சொல்லின் இறுதி எழுத்துகள் 'னை' ஒன்றி இருப்பதனாலும் இறுதி அடியின் இறுதி எழுத்து 'ன' என்பதன் இன எழுத்தான னே வந்துள்ளதாலும் இது ஓர் இயைபுத்தொடை கொண்ட பாடலாகும்.

இது தவிர முதலாம், மூன்றாம் அடிகளில் இரண்டாம் சீர்களின் இறுதி எழுத்துகள் ஒன்றி வருகின்றது. அந்தவகையிலும் இது இயைபுத்தொடை கொண்ட ஒரு பாடலாக அமைகின்றது.

உதாரணம் (2):

*புத்தரும் வாழ்ந்துதான் காடு தேடினார்*
*புலவரும் வாழ்ந்துதான் கவிதை பாடினார்*
*பக்தரும் காதலை மறந்ததில்லையே*
*பரமனும் பெண்களை வெறுத்ததில்லையே*

உதாரணம்(3):

*பாஞ்சாலி புகழ் காக்கத் தன்கை கொடுத்தான்*
*பாரதப் போர் முடிக்க சங்கை எடுத்தான்*
*பாண்டவர்க்கு உரிமை உள்ள பங்கைக் கொடுத்தான்*
*படிப்பதற்குக் கீதை எனும் பாடம் கொடுத்தான்*

இப்பாடலிலே எல்லா அடிகளிலும் இறுதி எழுத்து 'ன்' என வர ஒன்றுவதால் இது இயைபுத்தொடை வகை ஆகும்.

முதலாம் மூன்றாம் நான்காம் அடிகளிலே 'கொடுத்தான்' என்ற சொல் ஒன்றி வருவதாலும் இது இயைபுத்தொடை வகை ஆகும்.

இவை மட்டுமில்லாமல் முதலாம், இரண்டாம், மூன்றாம் அடிகள் ஒவ்வொன்றினதும் நான்காம் சீரின் இறுதி எழுத்து 'கை' என ஒன்றி வருவதால் இது இயைபுத்தொடை வகை ஆகும்.

ஆ. ஒன்றுக்கு மேற்பட்ட அடிகளின் இறுதிச் சொற்கள் ஒன்றுதல்.

உதாரணம்(1):

*நீ நடந்தால் நடை அழகு*
*நீ சிரித்தால் சிரிப்பு அழகு*
*நீ பேசும் தமிழ் அழகு*
*நீ ஒருவன் தான் அழகு*

உதாரணம்(2):

*காதல் தலைவன் வரவில்லையாம்!*
*கன்னத்தில் ஒன்று தரவில்லையாம்!*
*தூதுவிட்டாலும் பதில் இல்லையாம்!*
*அவள் துடித்தாளாம்; எண்ணித் தவித்தாளாம்!*
*மல்லிகை மலரை நெருப்பென்றாள் - நன்*
*மணியொசைதனை இடியென்றாள்*
*மெல்லிய பனியை மழையென்றாள் - தன்*
*மேனியை வெறும் கூடென்றாள்!*

இ. ஓர் அடியிலுள்ள ஒன்றுக்கு மேற்பட்ட சீர்களின் இறுதி எழுத்துகள் ஒன்றுதல்.

உதாரணம(1):

*நாடகம் எல்லாம் கண்டேன் - உந்தன்*
*ஆடும் விழியிலே; ஆடும் விழியிலே*
*கீதம் பாடும் மொழியிலே*

உதாரணம்(2)

*நீ வருவாய் என நான் இருந்தேன்*
*ஏன் மறந்தாய் என நான் அறியேன்*
*கண்கள் உறங்கவில்லை*
*இமைகள் தழுவவில்லை*

ஈ. ஓர் அடியில் வரும் இறுதிச் சொல் அந்த அடியில் வரும் இன்னொரு சீரிலாவது ஒன்றி வருதல்.

உதாரணம்: (3)

*மாங்குயிலே பூங்குயிலே சேதி ஒண்ணு கேளு*
*உனை மாலையிடத் தேடி வரும் நாளு என்ன நாளு*
*முத்து முத்து கண்ணாலே சுத்தி வந்தேன் முன்னாலே*

## (3) எதுகைத் தொடை

யாப்பிலக்கணத்தில் தொடை என வழங்கப்படும் செய்யுள் உறுப்பு வகைகளில் எதுகை முக்கியமானதாகும்.

வெவ்வேறு அடிகளின் அல்லது சீர்களின் இரண்டாவது எழுத்துகள் ஒன்றிவருதல் எதுகை எனப்படும்.

*அடிதொறும் தலை எழுத்து ஒப்பது மோனை*
*அது ஒழித் தொன்றின் எதுகை ஆகும்*

என்பது தொல்காப்பியர் கூற்று.

எதுகையானது சீர்களிலும், அடிகளிலும் வரக்கூடும். இவை முறையே சீரெதுகை என்றும் அடியெதுகை என்றும் அழைக்கப்படுகின்றன. பொதுவாக அடியெதுகையே செய்யுள்களில் சிறப்புப் பெறுகிறது. சீரெதுகை அதிகம் கைக்கொள்ளப்படுவதில்லை

உதாரணம்(1):

*பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை*
*நாலும் கலந்துனக்கு நான் தருவேன்*

இங்கே, இரண்டு அடிகளிலும் முதற்சீரின் இரண்டாம் எழுத்துகள் 'லு' என அமைந்து வருவதால் இவை அடிமோனை எனும் வகையினைச் சேர்ந்தவை ஆகும்.

உதாரணம்(2)

*செல்வத்துள்செல்வம்செவிச்செல்வம்*
*அச்செல்வம் செல்வத்துள் எல்லாம் தலை*

(குறள் -411)

இந்தச் செய்யுளில் முதல் அடியிலும் இரண்டாம் அடியிலும் முதற்சொல்லின் இரண்டாம் எழுத்து 'ல்' என்று வந்துள்ளமையால் இதுவும் எதுகைத்தொடை வகையினமாகும்.

அதேபோல, முதலாம் அடியில் முதலாம்; இரண்டாம் சீர்களின் இரண்டாம் எழுத்து 'ல்' என வருவதாலும், இரண்டாம் அடியில் முதலாம், இரண்டாம் சீர்களின் இரண்டாம் எழுத்துகள் 'ல்' என வருவதாலும் இது சீரெதுகை எனும் வகையினமாகும்.

உதாரணம்(3):

*பொம்பளைங்க காதலைத்தான் நம்பி விடாதே*
*நம்பியதால் நொந்துமனம் வெம்பி விடாதே*

இப்பபாடலின் முதலாவது அடியிலே. முதலாம்; மூன்றாம் சீர்களின் இரண்டாம் எழுத்துகள் 'ம்' என ஒன்றி வருகின்றது.

இரண்டாம் அடியிலே முதலாம் மூன்றாம் சீர்களின் இரண்டாம் எழுத்துகள் 'ம்' என ஒன்றி வருகின்றது. ஆதலால், இவை இரண்டும் சீரெதுகைகள் எனப்படுகின்றன.

அவை மட்டுமல்லாமல், முதலாம் இரண்டாம் அடிகளின் முதற்சீரின் இரண்டாம் எழுத்துகள் 'ம்' என ஒன்றி வருவதால் இவை அடியெதுகைகளாகவும் நோக்கக்கப்படுகின்றன.

## (4) முரண் தொடை

செய்யுள் ஒன்றிலே சொல் அல்லது பொருள் முரண்பட்டு நயம் பயக்கும் வகையில் அமைவது முரண்தொடை ஆகும். இது செய்யுளின் வெவ்வேறு அடிகளின் முதற்சீர்களில் அமையலாம். அல்லது ஒரே அடியின் வெவ்வேறு சீர்களிலும் அமையலாம்

உதாரணம்(1):

*உறவைத்தானே நான் நினைத்தது - என்னைப்*
*பிரிவு வந்து ஏன் அழைத்தது*

இங்கே, முதலாம் அடியின் முதற்சீர் உறவு என்று வந்திருக்கிறது. இரண்டாம் அடியின் முதற்சீர் பிரிவு என்று வந்திருக்கிறது. உறவுக்கு முரணானது பிரிவு என வந்துள்ளமையால் இது முரண்தொடை ஆகும்.

உதாரணம்(2)

*இரவும் வரும் பகலும் வரும்*
*நிலவு ஒன்றுதான்!*
*உறவும் வரும் பிரிவும் வரும்*
*நினைவு ஒன்றுதான்!*

## (5) அளபெடைத் தொடை

செய்யுள் அடிகளில் அளபெடை அமைய வருவது அளபெடைத் தொடை ஆகும்.

எழுத்துகள் தமக்குரிய மாத்திரைகளுக்கு அதிகமாக அளபெடுத்து (நீண்டு) ஒலிப்பது அளபெடை ஆகும்.

செய்யுள்களின் நயம் கருதி அவை தக்கபடி பயன்படுத்தப்படுகின்றன. பாடல்களில் அதிகமாகப் பயன் படுத்தப்படும் தொடை இதுவாகும்.

மோனை, எதுகை போன்ற பெரும்பாலான தொடைகளைப் போலவே அளபெடைத் தொடையும் செய்யுள் அடிகளின் முதற்சீரிலேயே அமைகின்றன.

உதாரணம்(1):

*ஓஒ இனிதே எமக்கிந்நோய் செய்தகண*
*தாஎம் இதற்பட்டது*

உதாரணம்(2):

*ஓஓஓ பிரியா பிரியாயாயா*
*என்ன்ன் பிரியா பிரியாயாயா*

என்ற பாடலிலே முதல் அடியின் முதற்சீரின் 'ஓ' என்பது 'ஓஓஓ' எனவும், மூன்றாம் சீரின் இறுதி எழுத்தின் 'யா' என்பது 'யாயாயா' எனவும், இரண்டாம் அடியின் முதற்சீரின் 'ன்' என்பது ன்ன்ன் எனவும் அளபெடை எடுத்து வந்துளமையினைக் காணலாம்.

உதாரணம்(3)

*பாட வந்ததோதோதோ காகானம்*
*பாவை கண்ணில் ஓர் நாநாநாணம்*
*கள்ளூறும்ம்ம் பொன்வேளை...*
*தள்ளாடும்ம்ம் பெண்மாலை...*

## (6) அந்தாதித் தொடை

ஓர் அடியின் ஈற்றில் அமையும் சீர் அல்லது அசை (எழுத்து) அடுத்துவரும் அடியின் தொடக்கமாக அமைவது அந்தாதித்தொடை எனப்படும்.

அடுத்தடுத்த செய்யுள்களில் இத்தொடர்பு இடம்பெறின் அதுவும் அந்தாதித்தொடையே ஆகும்.

ஒரு செய்யுளின் இறுதிச்சீர் எழுத்தை அடுத்துவரும் செய்யுளின் முதலில் வரும் வகையில் அமையின் அதுவும் அந்தாதித் தொடை எனப்படும்

ஓர் அடியின் ஈற்றிலும் அடுத்த அடியின் முதலிலும் எழுத்து மட்டும் ஒன்றாய் வருவது எழுத்தந்தாதி எனலாம்.

அதாவது, அசை; சீர்; அடி என்பவை ஒன்றாக அமைய வந்தால் அவை முறையே அசையந்தாதி, சீரந்தாதி, அடியந்தாதி என்று சொல்லப்படும்.

உதாரணம்(1)

வேங்கையஞ் சார லோங்கிய மாதவி
விரிமலர்ப் பொதும்பர் நெல்லியன் முகமதி
திருந்திய சிந்தையைத் திறைகொண் டனவே

மேலுள்ள பாடலில் எழுத்தந்தாதித் தொடை அமைந்துள்ளதைக் காணலாம்.

முதலடியின் இறுதிச்சொல்லின் இறுதியெழுத்தான 'வி' இரண்டாம் அடியின் முதல்சொல்லின் முதல் எழுத்தாக வருவதும், இரண்டாம் அடியின் இறுதிச்சொல்லின் இறுதி எழுத்தான 'தி' மூன்றாம் அடியின் முதலில் வருவதும், மூன்றாம் அடியின் இறுதி எழுத்தாக 'வே' மீண்டும் முதலடியின் முதலில் வருவதையும் காணலாம்.

அந்தாதித்தொடைக்கு எடுத்துக்காட்டாக, இளம்பூரணர் பின்வரும் பாடலைக் கொடுத்துள்ளார்.

உலகுடன் விளங்கும் ஒளிதிகழ் அவிர்மதி
மதிநலன் அழிக்கும் வளங்கெழு முக்குடை
முக்குடை நீழல் பொற்புடை ஆசனம்
ஆசனத் திருந்த திருந்தொளி அறிவன்
அறிவுசேர் உள்ளமோ டருந்தவம் புரிந்து
துன்னிய மாந்தர் அஃதென்ப
பன்னருஞ் சிறப்பின் விண்மிசை உலகே

உதாரணம்(2):

வசந்த கால நதிகளிலே வைரமணி நீரலைகள்
நீரலைகள் மீதினிலே நெஞ்சிரண்டின் நினைவலைகள்
நினைவலைகள் தொடர்ந்து வந்தால் நேரமெல்லாம் கனவலைகள்
கனவலைகள் வளர்வதற்குக் காமனவன் மலர்க்கணைகள்
மலர்க்கண்ணைகள் பாய்ந்து விட்டால் மடியிரண்டும் பஞ்சணைகள்
பஞ்சணையில் பள்ளி கொண்டால் மனமிரண்டும் தலையணைகள்
தலையணையில் முகம் புதைத்து சரசமிடும் புதுக்கலைகள்
புதுக்கலைகள் பெறுவதற்கு பூமாலை மணவினைகள்
மணவினைகள் யாருடனோ மாயவனின் விதிவகைகள்
விதிவகைகள் முடிவு செய்யும் வசந்தகால நீரலைகள்

உதாரணம்(3):

*மலர்காவியம் எழில் ராணியின் இதழ் நாடகம்*
*இதழ் நாடகம் தமிழ் காதலின் புகழ் கோபுரம்*
*புகழ் கோபுரம் அகப்பாடலின் சுமை தாங்குமே*
*சுமை தாங்கியும் இமை மூடியும் சுகம் காணலாம்*

## (7) இரட்டைத்தொடை

செய்யுள் ஒன்றின் ஓர் அடியில் முழுவதும் ஒரே சொல்லே அதன் சீர்களாகத் திரும்பத் திரும்ப வருமாயின் அது இரட்டைத் தொடை எனப்படும்.

எனினும் இச்சொல் எல்லா இடங்களிலும் ஒரே பொருளிலேயே வரவேண்டும் என்பதில்லை. வெவ்வேறு பொருள்களிலும் வரலாம்.

உதாரணம்: ஒக்குமே, ஒக்குமே, ஒக்குமே ஒக்கும்

இதற்கான பொருள், 'பூத்திருக்கின்ற செந்நிறப்பூவானது காற்றில் அசையும் பொழுது சிறிய தீபம் ஒன்று அசைந்தாடுவது போல் உள்ளதாம்.'

## (8) செந்தொடை

மோனை, எதுகை, இயைபு, முரண், அளபெடை, அந்தாதி, இரட்டை போன்ற எவ்வகைத் தொடையும் இல்லாமல், அவற்றில் உள்ள சொற்களின் இயல்பான தன்மையினால் அழகுற அமைவது செந்தொடை எனப்படுகின்றது.

உதாரணம்:

*மாதமோ வருசங்களோ*
*மன்னவன் வரும் வரைக்கும்*
*காதலால் நான் உருகி காத்திருப்பேன் - என்*
*கண்ணான கண்ணனையே பாத்திருப்பேன்*

ஆகவே, ஓர் உடலினையும் காலினையும் இணைக்கும் பகுதியான தொடை எந்தளவுக்கு ஓர் உயிர் உறுதியாகத் தொழிற்படுவதற்கு உறுதுணையாகச் செயற்படுகிறதோ அதுபோல, யாப்பிலக்கணக் கூறான தொடையும் பாடல்களிலே இரண்டு அசைகளையோ அல்லது இரண்டு சீர்களையோ அல்லது இரண்டு அடிகளையோ இணைக்கிறபோது இனிய ஓசை நயம் வருவதை உணர்கிறோம். பின்னர் அதனை ரசித்துக் கேட்கிறோம். இப்படி ரசிக்கின்ற பாடல்களின் பொருள் நயம் அறிந்து வியக்கிறோம்.

தொடையில்லாத பாடல்கள் கேட்பதற்கு இனிமையில்லாது போவதால் அல்லது ரசனை இல்லாது போவதால் தொடையற்ற பாட்டு நடையற்றுப் போகும் என்ற கூற்று உண்மை என்று சொல்ல தோன்றுகிறது.

# 07.
## விவேக கணிதம்

எதிலும் கணிதம்; எங்கும் கணிதம் என்ற உண்மையினை யாராலும் தட்டிக்கழித்துவிட முடியாது. மனித குலம் தோன்றிய காலம் முதலே அவனை அறியாமலேயே கணித அறிவும், கணிதம் தொடர்பான மனித ஆற்றலும் அவனுடன் ஒன்றியிருந்து வந்திருக்கிறது என்று கூறவேண்டும்.

உதாரணமாக ஒரு விவசாயி தனது விவசாயத்திற்கு வேண்டிய நிலப்பரப்பினை என்ன அளவு தேர்வு செய்ய வேண்டும்? அதில் எவ்வளவு பயிரிட வேண்டும்? எவ்வளவு நீர் பாய்ச்ச வேண்டும? எத்தனை காலத்திற்குப் பின்னர் அறுவடை செய்ய வேண்டும்? போன்ற சிந்தனைகள் அவனின் எண்ணத்தில் தோன்றி வருகின்றன.

இவை விவசாயியை அறியாமலேயே அவனுக்குள் உருவாகிய கணித எண்ணம் என்பது அவனுக்குத் தெரிவதில்லை.

ஒரு சமையலறையில் சாதாரணமான ஒருபெண், இன்றைக்கு எத்தனை பேருக்கு உணவு தயாரிக்க வேண்டும்? எந்தளவு பாத்திரத்தைத் தெரிவு செய்ய வேண்டும்? அரிசி எவ்வளவு எடுக்க வேண்டும்? என்ன அளவு காய்கறிகள் வெட்டிப் போட வேண்டும்? உப்பின் அளவு எவ்வளவாக இருக்க வேண்டும்? என்று சிந்திப்பதெல்லாம் கணிதம் பற்றிய ஓர் எண்ணப்பாடுதான்.

கணிதம் என்ற சிந்தனை வகைப்பாட்டிற்குள்ளே எண்கள் பற்றித்தான் மனிதன் முதல் முதலாகச் சிந்திக்கத் தொடங்கினான். ஒவ்வொரு மொழிக்கும் ஒவ்வொரு குறியீடுகளை எண்களாகப் பயன்படுத்தினான். உலகெங்கும் பொதுவான எண் குறியீடுகளாக இந்து அராபிய இலக்கங்கள் பயன்படுத்தப்பட்டு வருவதை அவதானிக்க முடிகிறது.

0,1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, என்பவை மாத்திரமே இலக்கங்களாகும். இந்த இலக்கங்களால் உருவாகி வருபவை யாவும் எண்களாகும்.

உதாரணமாக, 360 என்பதை இலக்கம் என்று சொல்லுதல் தவறாகும். 360 என்பது 3, 6, 0 எனும் இலக்கங்களால் ஆகிவரும் ஓர் எண் மாத்திரமே. இலக்கங்கள் யாவும் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப எண் எனவும் சொல்லப்படலாம். ஆனால், எண்களை இலக்கங்கள் என சொல்வது தவறாகும்.

காகங்கள் எல்லாம் கறுப்பாகும்; கறுப்புகளெல்லாம் காகங்களல்ல! என்பதற்கு இது ஒப்பானதாகும். எண்கள் பற்றிய கிரகித்தல் வளர்த்துக்கொள்ளும் போது மனிதனின் சிந்தனை ஆற்றலும் வளர்ந்து வருகிறது. இதற்காக சின்னதாக புதிர்க்கதை ஒன்றினைச் சொல்கிறேன்.

அவன் ஒரு விவசாயி. நோய் வாய்ப்பட்டிருந்த அவன் ஒரு நாள் திடீரென இறந்துவிட்டான். அவனின் மூன்று மகன்களும் தந்தைக்கு ஈமைக்கிரிகைகள் செய்து முடித்துவிட்டு, அடுத்த நாள் அவர் எழுதி வைத்திருந்த உயிலை எடுத்துப் பார்த்தனர்.

"என்னுடைய சொத்தில் இரண்டிலொரு பங்கு என் முதல் மகனுக்கும், மூன்றிலொரு பங்கு இரண்டாவது மகனுக்கும், ஒன்பதிலொரு பங்கு கடைசி மகனுக்கும் சேர வேண்டியது" என உயிலில் எழுதியிருந்தது.

உயிலைப் பார்த்ததும் மூன்று மகன்களும் குழம்பிப்போய் தலையில் கைவைத்து உட்கார்ந்துவிட்டனர். காரணம், தந்தையின் சொத்து என்று இருந்தது 17 பசு மாடுகள் மாத்திரமே!

தந்தையின் உயில் கணக்குப்படி 17 பசு மாடுகளையும் பாதிபாதியாகவோ; மூன்றிலொரு பங்காகவோ; ஒன்பதிலொரு பகுதியாகவோ என்று பிரிக்கும்போது பசு மாடுகள் முழுதாக இருக்க வேண்டும்.

இப்படி மூன்று பேரும் பசுமாடுகளைப் பங்கிட முடியாமல் தவித்துக்கொண்டிருப்பதைப் பார்த்து பக்கத்து வீட்டு விவசாயி வந்து "உங்களுக்குள்யே என்ன பிரச்சினை? அதனை நான் தீர்த்து வைக்கலாமா?" என்று கேட்டார்.

இவர்களுக்கென தந்தை எழுதி வைத்த உயிலைக் கவனத்தோடு வாசித்தார், பக்கத்து வீட்டு விவசாயி. இப்ப ஒரு முடிவுக்கு வந்தவராக தன் வீடு நோக்கி நடந்து போனார். இவர்களும் அவரை அதிசயமாகவே பார்த்துக்கொண்டு நின்றனர். தன் வீடு சென்ற அந்த விவசாயி தன் வீட்டிலுள்ள பசு மாடுகளில் ஒன்றைக் கொண்டு வந்து அந்த 17 பசு மாடுகளின் கூட்டத்தோடு சேர்த்தார்.

இப்பொழுது அந்தக் கூட்டத்தில் 18 பசு மாடுகள் நின்றன. அந்த விவசாயி, மூத்தமகனைக் கூப்பிட்டார். 18 இன் இரண்டிலொரு பங்கு 9 தானே. 9 பசு மாடுகளை மூத்தவனிடம் கொடுத்தார். அடுத்து இரண்டாவது மகனைக் கூப்பிட்டார். 18 இன் மூன்றிலொரு பங்கு 6 தானே. 6 பசு மாடுகளை இரண்டாவது மகனிடம் கொடுத்தார். இறுதியாக இளைய மகனைக் கூப்பிட்டார். 18 இன் ஒன்பதிலொரு பங்கு 2 தானே. 2 பசுக்களை இளைய மகனிடம் கொடுத்தர்.

9, 6, 2 இவற்றின் கூட்டுத்தொகை 17 தானே. ஆகவே மிகுதியாக உள்ளது ஒரு பசு. அது அந்த பக்கத்து வீட்டு விவசாயின் பசு. அவர் அந்தப் பசுவை தன் வீட்டிற்கு அழைத்துச் சென்றார். தன் தந்தையின் உயில்படி தங்கள் சொத்துகளைப் பிரித்துவிட்டோம் என்ற திருப்தியில் மூவரும் சந்தோசமாக இருந்தனர்.

இப்படியான சிக்கல்களில் இருந்து விடுபடுவதற்கு அந்த விவசாயிக்குள் தோன்றிய சிந்தனை எண்கள் பற்றிய சிந்தனைதான். 2, 3, 9 இந்த எண்களால் பிரிக்கக்கூடிய மிகச் சிறிய எண் 18 எனும் சிந்தனை ஆகும். இதனைக் கணிதத்தில் பொ.ம.சி (பொது மடங்குகளில் சிறியது) என்று கூறி வருகிறோம். அந்த விவசாயிக்கு தன் சிந்தனை கணிதத்திலே இது பொ.ம.சி என்பது தெரியவே தெரியாது. ஆனாலும், அப்படியான ஒரு முறையிலே சிந்தித்தான் என்பது மெய்யாகும்.

இப்படியாக கணிதம் பற்றிய சிந்தனை வெளிப்பாடுகள் பலவற்றைச் சொல்லிக்கொண்டே போகலாம். கேட்பதற்கும் படிப்பதற்கும் அவை சுவார்சியமானவை ஆகும்.



அம்மா

உன் பாதங்கள் தொட்டு

வான் புகழ் பெற்றவர் உண்டு

தங்கம்மா என்றால்

எங்கள் ஊரின்

விருந்தோம்பலின் செம்மல் என்று

ஊரவர் சொல்லக் கேட்டதுண்டு

நீ தங்க மனசுகாரர்களின்

சொந்தக்காரி அம்மா...

- குடும்பத்தினர்.

9789554315143

சிறீ லக்ஷ்மி பிறிண்டேர்ஸ் பலாலிறோட், ஊரெழு T.P 0777 242168